Registered as a Newspaper  பக்கங்கள் 06  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  ஆடி 21  [ 05-08-1993 ]  வியாழக்கிழமை  ஒசை 169

## இளைஞரின் இருதயத்துள் அறுவை கத்தி கவலையீனத்தால் நோயாளி பலி

கொழும்பு ஆஸ்பத்திரியில் இருதய அறுவை சிகிச்சைக்காக சென்ற தமிழ் இளைஞர் ஒருவரின் இருதயத்தினுள் வைத்தியர்கள் கவனக்குறைவாக அறுவைக் கத்தியை வைத்து தைத்துவிட்டதால் அவர் மரணமடைந்த பரிதாபகர சம்பவம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது. கொழும்பிலுள்ள அரச பொதுமருத்துவமனையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயது இளைஞரான பிரான்சிஸ் செல்வநாதன் என்பவர் கடந்த இரு நாட்களுக்கு முன் இருதய அறுவைச்சிகிச்சை செய்து கொண்டார். அப்போது 'இலக்கம்- 15' என்ற பிளேட்கத்தியை அறுவைச் சிகிச்சைக்குப் பின் அவரின் இருதயத்தினுள் வைத்தியர்கள் கவனக்குறைவாக வைத்து தைத்துவிட்டனர். அறுவைச் சிகிச்சையின்பின் 'இலக்கம்-15' என்ற அறுவைச் சிகிச்சைக் கத்தியை காணவில்லை எனத் தேடிய வைத்தியர்கள் இந்த இளைஞரை மீண்டும் அழைத்து இரண்டாவது முறையாக (6ஆம் பக்கம் பார்க்க)

# அரசு இனப்பிரச்சினை தீர்விற்கு சர்வதேச உதவியை நாட முடிவு!

## ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவிப்பு

[சிங்கப்பூர்]

இலங்கையின் இனப்பிரச்சினைக்கும், தீர்வுகாணப்படாதிருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வகாண சர்வதேச உதவியை சிறிலங்கா அரசு கோரவுள்ளது என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். சிங்கப்பூரில் உள்ள மலேசிய செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அப் பேட்டியில்: இலங்கையில் பொருளாதார நிலைமை ஊக்கமளிப்பதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச சமுதாயத்தின் உதவி நாடப்படும் என்றும் அன்னிய முதலீட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில் முயற்சிகளை அரசு எடுத்துவருவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் இனப் பிரச்சினை இல்லை எனவும் பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளதெனவும் டி. பி. விஜேதுங்கா பதவியேற்றவுடன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## க. பொ. த. உயர்தர பரீட்சை சமகாலத்தில் இரு பாடங்கள்

(யாழ்ப்பாணம்)

நடைபெறுகின்ற க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை நேர அட்டவணையில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்குப் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளார்கள்.

சமஸ்கிருதமும் இந்து சமய பாடமும் பரீட்சை நேர அட்ட இயக்கச்சிப் பகுதியில் வணையின் படி சமகாலத்தில் நடைபெறவுள்ளன. இது குறித்துக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவரைக் கேட்டபோது, சம்மந்தப்பட்ட பரீட்சார்த்திகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது.

## முன்னேற முயன்ற படை மீது புலிகள் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

இயக்கச்சிப் பகுதி காவலரண்களிலிருந்து முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதனைத் தொடர்ந்து படையினர் முகாம் திரும்பினர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. இதன் போது முன்னேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்ததாகவும் இதனால் தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் படையினர் அங்கிருந்து பின்வாங்கி முகாம் காவலரணிற்குள் முடங்கிக் கொண்டனர்.

இத்தாக்குதலின்போது படையினர் தரப்பிற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## அடையாளம் காணப்படாத சடலம் புதைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

கிளாலிக்கடலில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான பெண்ணின் சடலம் புதைக்கப்பட்டது

28ஆம் திகதி இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பலியான எட்டுப்பேரில் ஏழுபேர் அடையாளம் காணப்பட்டமை தெரிந்ததே.

மேற்படி பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்று புதைக்கப்பட்டதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (தி) (பா)

# உண்ணாவிரதிகள் உடல்நிலை மோசம்; 12பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் 33 யுத்தக்கைதிகளினதும் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 29ஆம் திகதிமுதல் 33பேர்க்கைதிகளும் சாகும் வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருவதுடன் நேற்று முதல் நீராகாரம் அருந்துவதையும் கைவிட்டுள்ளனர்.

இவர்களில் 12பேரது உடல் நிலைமிகவும் மோசமடைந்துள்ளதாகவும் இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுயநினைவிழந்த நிலையில் காணப்பட்ட பியந்த, சமன் சிறி, ஜெயவர்தன, சுனில், திசநாயக்கா, ரட்ணாயக்கா, சமத் திலக்க, விஜயபண்டார, குமார, விஜயரட்ன, கருணாநாயக்க அத்துகொரள ஆகியோரே வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## கைதிகள் நீரருந்தாது உண்ணாவிரதம்

## வடமராட்சிக் கடலில் மீனவர் மீது தாக்குதல்

வடமராட்சி கிழக்கு கடலில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலால் மீனவர்கள் உடைமைகளை இழந்து நீந்திக் கரைசேர்ந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு வடமராட்சிக் கிழக்கு கடற்பரப்பில் இடம்பெற்றது.

இதுபற்றி மீனவர்களான தியோ [வயது 22], துரைசிங்கம் [வயது 45], தியாகராசா [வயது 22] ஆகியோர் எமது செய்தியாளருக்கு தகவல் தருகையில்:

வழமைபோல் தாம் தமது தொழிலுக்கு சென்ற சமயம் தமது படகினை அண்மித்து நான்கு விசைப்படகில் வந்த சிறிலங்கா கடற்படையினர் 50 கலிபர் தாக்குதலையும் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனரென்றும் உயிராபத்து இன்றி தாம் தப்புவதற்காக உடைமைகளை கைவிட்டு கடலில் குதித்து கரையை வந்து சேர்ந்ததாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை;

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் கரையை அண்டிய பகுதியில் ஒரு கட்டுமரத்தில் நாகையா சிவலிங்கம் (வயது40), ஜெயம் கோபாலசிங்கம் [வயது 22] ஆகிய இருவரும் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கடற்படையினர் தமது படகினை கட்டுமரத்துடன் மோதவிட்டார்கள். அப்போது கட்டுமரத்திலிருந்த இரு மீனவர்களும் கடலில் குதித்து தெய்வாதீனமாக உயிர்தப்பினார்கள். [36], [30]

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும், நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுதினம் சனிக்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மேலும் ஒருவரை காணவில்லை

(நெல்லியடி)

கிளாலி ஊடாக கடந்த 28ஆம் திகதி பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் இதுவரை வீடுவந்து சேரவில்லை எனத் தெரியவந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தினத்தன்று சிறிலங்கா கடற்படையினர், பயணிகள் படகுகள் இரண்டின் மீது தாக்குதல் நடத்தியதும் இதன்போது 8 பேர் பலியானதுடன் மேலும் பலர் காணாமல் போனதும் தெரிந்ததே.

இச் சம்பவம் நடைபெற்றபோது பருத்தித்துறை 4ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சலமன் மாசிலாமணி (வயது 45)என்பவரும் பயணம்செய்ததாகவும் இவர் இதுவரை வீடு வந்து சேரவில்லையெனவும் தெரியவந்துள்ளது. (30)

## தந்தைக்கும் மகனுக்கும்

உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச சமுதாயத்தின் உதவி நாடப்படும் என்

தாகவும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா குறிப்பிட்டார்.

உள்ளதெனவும் டி. பி. விஜேதுங்கா பதவியேற்றவுடன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப் பகுதி காவலரண்களிலிருந்து முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதனைத் தொடர்ந்து படையினர் முகாம் திரும்பினர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. இதன்போது முன்னேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்ததாகவும் இதனால் தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் படையினர் அங்கிருந்து பின்வாங்கி முகாம் காவலரணிற்குள் முடங்கிக் கொண்டனர்.

இத்தாக்குதலின்போது படையினர் தரப்பிற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## அடையாளம் காணப்படாத சடலம் புதைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

கிளாலிக்கடலில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான பெண்ணின் சடலம் புதைக்கப்பட்டது

28ஆம் திகதி இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பலியான எட்டுப்பேரில் ஏழுபேர் அடையாளம் காணப்பட்டமை தெரிந்ததே.

மேற்படி பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்று புதைக்கப்பட்டதாக யாழ். வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (தி) (பா)

## கறுப்புப்பட்டி அணிந்து தாதிகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பொது வைத்திய தாதிகள் சங்க யாழ் போதனா வைத்தியசாலைக் கிளையினர் இன்று வியாழக்கிழமை கறுப்புப்பட்டி அணிந்து கடமையில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பு, வாராந்த மொத்த வேலை நேரக் குறைப்பு, மற்றும் தாதியர்களுக்கான பல்வேறு உரிமைகளை முன்வைத்து பொது வைத்திய தாதிகள் சங்கம் கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் இன்று ஐந்தாம் திகதி வரையும் நாடு பூராவும் கறுப்புப்பட்டி இயக்கத்தை நடத்தி வருகிறது.

எனவே இப்போராட்டம் பூரண வெற்றிபெற யாழ். போதனா வைத்தியசாலைக் கிளையினர் இன்று கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபடுவார்கள். (தி)

## காரைநகர் படையினர் கரை நோக்கி பீரங்கி தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதி சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் பொன்னாலைப் பகுதியை நோக்கி கனன் தாக்குதலை நடாத்தினர்.

காரைநகரில் உள்ள வலந்தலைச் சந்தியில் அமைந்துள்ள காவலரணில் இருந்தே நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

## 3200 மெற்றிக் தொன் உணவுடன் குமாரி

குமாரி கப்பல் அத்தியாவசிய பொருள்களுடன் இன்னும் சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் 3200 மெட்ரிக் தொன் நிவாரணப் பொருள்கள் ஏற்றும் வேலைகள் முடிவுக் கட்டத்தை நெருங்கி விட்டதாக அறியப்படுகிறது. (தி)

## 'சுதந்திரப் பறவைகள்' சனியன்று வெளிவரும்

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரப் பூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் ஆவணி மாத இதழ் சனிக்கிழமை வெளிவருகிறது. மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பில் மகளிர் படையணி வீர சாதனை என்ற தலைப்பு செய்தியுடன், உரிமைக்காக உரத்த குரல் எழுப்புங்கள், சுதந்திரத்தை தேடி, பெண்களும் விபச்சார உலகமும், வளர்முக நாடுகளில் பெண்களும் கல்வியும், பெண்ணுலகில் புதிய வரலாறு படைத்த எரித்திரியப் பெண்கள் என்ற ஆக்கங்களும் கண்மலர்வாய் என்ற சிறுகதையும் தாங்கி ஆவணி இதழ் வெளியாகின்றது.

# உண்ணாவிரதிகள் உடல்நிலை மோசம்; 12பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் 33 யுத்தக்கைதிகளினதும் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த 29ஆம் திகதிமுதல் 33போர்க்கைதிகளும் சாகும் வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருவதுடன் நேற்று முதல் நீராகாரம் அருந்துவதையும் கைவிட்டுள்ளனர்.

இவர்களில் 12பேரது உடல் நிலைமிகவும் மோசமடைந்துள்ளதாகவும் இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுயநினைவிழந்த நிலையில் காணப்பட்ட பியந்த, சமன் சிறி, ஜெயவர்தன, சுனில், திசநாயக்கா, ரட்ணாயக்கா, சமதிலக்க, விஜயபண்டார, குமார, விஜயரட்ன, கருணாநாயக்க அத்துகொரள ஆகியோரே வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## கைதிகள் நீரருந்தாது உண்ணாவிரதம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

உண்ணாவிரதத்தை ஆரம்பித்து ஏழாவது நாளான நேற்று சிங்கள யுத்தக் கைதிகள் நீரருந்தாது தமது சாகும் வரையிலான உண்ணா விரத போராட்டத்தை தொடர்ந்தனர்.

கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கும், பிரிகேடியர் வீரசேகரவிற்கு உண்ணாவிரதிகள் நிலைமை குறித்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர் இதுவே அவர்களுக்கு அனுப்பப்படும் இறுதிக் கடிதம் என உறவினர்கள் கூறினர்.

எமது பிள்ளைகள் இறப்பின் இவர்களது உடலுக்கு அருகில் கூட அரசை அணுக விடுவதில்லை என்று போர்க் கைதிகளின் பெற்றோர்கள் கூறினர்.

இதே வேளை உண்ணாவிரதிகள் அனைவரும் சோர்வடைந்து படுத்த படுக்கையாகி விட்டனர். உரையாடக்கூட முடியாத நிலையில் அவர்கள் மிகவும் பலவீன நிலையை அடைந்துள்ளனர் சிலர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யுத்தக் கைதிகள் விவகாரம்: 'செடக்' நிறுவனம் அக்கறை

யுத்தக்கைதிகளின் விடுதலை தொடர்பாக செடக் எனும் மனிதநேய நிறுவனம் அக்கறை செலுத்திவருவதாகவும் அவர்கள் யாழ்ப்பாணம் செல்ல முயற்சி எடுத்துவருவதாகவும் பி. பி ஸி.நேற்றிரவு அறிவித்தது.

இக் குழுவினர் வடபகுதி செல்வதுதொடர்பாக கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தமது பயணம் வெற்றிபெற செடக்குழுவினர் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. எது எப்படியிருப்பினும் காலதாமதமாகவே முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய நிலை உள்ளது என்பதை செடக் குழுவினர் ஒத்துக் கொண்டுள்ளனர்.

இதே சமயம் யுத்தக் கைதியின் சகோதரர் ஏ. ஜே எம். சந்திரசேகர என்பவர் தமது சகோதரர் மரணிக்க நேர்ந்தால் தாம் தற்கொலைசெய்து விடுவதாக குறிப்பிடும் கடிதம் ஒன்றை கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரிடம் கையளித்துள்ளார். எனமற்றுமோர் செய்தி தெரிவிக்கிறது.

## அமெரிக்க மாசசூசட்ஸ் மாநிலத்தில் தமிழீழப் பிரகடனம்; கொடியேற்றம்

அமெரிக்க நகர் ஒன்றில் கடந்த மே மாதம் தமிழீழ தினம் பிரகடனம் செய்யப்பட்டது.மாசசூசட்ஸ் மாநிலத்தில் சமவில் நகரபிதா மே மாதம் 22 ஆம் திகதியை தமிழீழ தினமாக தமது நகரில் பிரகடனம் செய்து தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தார்.

தமிழீழத்தின் மீதான தமிழரின் உரிமையை உறுதி செய்ய அமெரிக்க காங்கிரசும் அமெரிக்க ஜனாதிபதியும் ஐ. நா. சபைக்கு இவ்விடயத்தை எடுத்துச் சென்று தமிழரின் விடுதலைப் போரிற்கு ஆதரவுதிரட்டவேண்டும் என இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தமது சமவில் மாநகரம் தமிழர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறது என்றும் தமிழர் தமது விடுதலைப் போரில் வெற்றி பெறும் நாள் தூரத்தில் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

(நெல்லியடி)

கிளாலி ஊடாக கடந்த 28ஆம் திகதி பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் இதுவரை வீடுவந்து சேரவில்லை எனத் தெரியவந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தினத்தன்று சிறிலங்கா கடற்படையினர், பயணிகள் படகுகள் இரண்டின் மீது தாக்குதல் நடத்தியதும் இதன்போது 8 பேர் பலியானதுடன் மேலும் பலர் காணாமல் போனதும் தெரிந்ததே.

இச் சம்பவம் நடைபெற்ற போது பருத்தித்துறை 4ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சலமன் மாசிலாமணி (வயது 45) என்பவரும் பயணம்செய்ததாகவும் இவர் இதுவரை வீடு வந்து சேரவில்லையெனவும் தெரியவந்துள்ளது. (30)

## தந்தைக்கும் மகனுக்கும் கோடரி வெட்டு

(நெல்லியடி)

கோடரியினால் தாக்கப்பட்ட தந்தையும், மகனும் பலத்த காயங்களுடன் மந்திகையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம், நேற்றுக் காலை 7. 45 மணியளவில் கரவெட்டி மத்தொனி என்னும் பகுதியில் நடைபெற்றுள்ளது.

காயங்களுக்கிலக்கான, வல்லிபுரம்-இராசையா (வயது 76) அவரது மகனான நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு. இராசையா குகதாஸ் (வயது 37) ஆகியோர், வைத்தியசாலையில் நமது நெல்லியடி செய்தியாளருக்குத் தகவல் தருகையில்:- தமது வீட்டுக்கு தினமும் வந்து செல்லும் மனநோயாளியாகிய வல்லிபுரம் சிவயோகநாதன் என்பவர் நேற்றுக் காலை தம் வீட்டுக்கு வந்து அங்குள்ள கோடரியை எடுத்து முதலில் தந்தையை தாக்கினாரென்றும், இதனைத் தடுக்க இவரது மகனான ஆசிரியர் சென்ற சமயம் அவருக்கும் கையில் கோடரி வெட்டு வீழ்ந்ததென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1983ஆம் வருடமும் இம் மனநோயாளி தனது மைத்துனரான கரவெட்டி ஞானசாரியார் வித்தியாலய அதிபர் திரு.வீ.கே. நடராஜா என்பவரையும் கம்பியினால் அடித்துக் கொலை செய்து பின் சிறைத்தண்டனை பெற்று, விடுதலையானவரென்றும் கூறப்படுகின்றது.

## லைசோல், எக்ஸ்ரேபிலிம் எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்திற்குலைசோல், எக்ஸ்ரே பிலிம் போன்றவையும் இம்முறை கொழும்பிலிருந்து வருகின்றதென தெரிவிக்பட்டுள்ளது.

இதேவேளை நீரை சுத்திகரிப்பதற்கு பாவிக்கப்படும் குளோறீன் பிராந்திய சுகாதாரசேவைகள்பணிமனையின் கீழுள்ள மருத்துவமனைகளில் தீர்ந்து விட்டபோதிலும் இம்முறை வரும் மருந்து பொருள்களின் பட்டியலில் குளோறீன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெடிப்பொருள்கள் குறித்து செஞ்சிலுவை சுவரொட்டி

(குருநகர்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் மாணவர்களுக்கு உயிராபத்தில் இருந்து தப்பக் கூடிய செய்தியைக் கொண்ட சுவரொட்டிகளை வெளியிட்டிருக்கிறது.

யாழ். நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள மேற்படி சுவரொட்டிகளில் முன்னர் கண்டு பழக்கம் இல்லாத பொருள்களைக் கண்டால் அவை பற்றிய தகவல்களை ஆசான்களூடாக சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு அறிவிக்க மாணவமணிகளை ஊக்கப்படுத்தும் வாசகங்கள் காணப்படுகின்றன.

அந்தப் பொருள்கள் எறிகணை, வேறு வெடிப்பொருள்களாக இருந்து உயிராபத்தை விளைவிக்கலாமென்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. (21)

# வரி விளம்பரம்

## ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற் களஞ்சியம், (மட்றாஸ் டிக்சனெறி) கொமிக்ஸ் மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர்
(சி-7071)

## தேவை

¼'' (அங்குலம்) இரும்புக் கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½' (அடி) க்குமேல் இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி. த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி.
(சி-7098)

## சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் மற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி யாழ்ப்பாணம். (5592)

## வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூபா 6/- வேப்பம் பழக் காய்ந்த கோது கிலோ ரூ 2- மில்க்வைற் (சி 7133)

## றேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வவணடிங்கடிகாரங்கள 90/- ஒட்டோமெற்றிக் கடிகாரங்கள 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90/, 150/-மேசை சுவர்பணிக்கூடுகள் 100 200/- றேடியோமட்டும் 150/- கசற் றேடியோ— 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
(சி/7113)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

மூனை கடற்தொழிலாளர் சிசகன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின்வருடாந்த பொதுக் கூட்டம் இன்றுமாலை 3 மணிக்கு நடைபெறும். (யோ)

## கணித பாட

# ஜனாதிபதியின் கருத்தைப் பலப்படுத்துவதே முதல்பணி

-சிறிசேன குரே

(கொழும்பு)

ஜனாதிபதியின்கருத்தையும், கட்சியையும் பலப்படுத்துவதே எனது முதல் பணியாக இருக்கும் என்று கடந்த வியாழன் காலையில் நாடுதிரும்பிய அமைச்சரும் ஐ.தே.க பொதுச்செயலாளருமான சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

கனடாவிலிருந்து நாடுதிரும்பிய பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய அமைச்சர் மேலும்கூறுகையில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா என் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளார். எனக்கு இடப்பட்டுள்ள பணிகளை நான் சரிவர நிறைவேற்றுவேன். நான் பட்டம் பதவிகளை நாடி ஓட மாட்டேன் ஒருவேலையைச் செய்யுமாறு நான் கேட்கப்பட்டால் உடன் அப்பணியைச் செய்வேன். கட்சிக்கும், நாட்டுக்கும் சேவையாற்ற நான் கடமைப்பட்டுள்ளேன். சில மணி நேரம் நான் நித்திரை கொண்டேன். வேலைகளைக் கவனிப்பதற்காக நான் அதிகாலையிலேயே எழுந்து விட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஆடைத்தொழிற்சாலை மூடுவிழா 200 தொழிலாளர் வீதியில்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சுதந்திரவர்த்தக வலயத்தில் இயங்கி வந்த கதிர்காம குமாரர் ஆடைத் தொழிற்சாலை கடந்த ஜூலை 10 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

இந்த ஆடைத்தொழிற்சாலையை நிர்வகித்து வந்த இந்திய முகாமைக்காரர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 200 தொழிலாளர்கள் வேலையிழந்து உள்ளனர். ஜூலை மாதச் சம்பளமும் வழங்கப்படவில்லை நிர்வாகம் 1991 முதல் ஊழியர் சகாய நிதிப் பணத்தையும் செலுத்தத் தவறிவிட்டது என்று ஊழியர் தரப்பில் சொல்லப்படுகிறது.

# பாடசாலை ஊழியர்பதவிக்கு வவுனியாவில் நேர்முகதேர்வு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது என கல்விச் சேவைச் சபை செயலாளர் ஏ. எஸ். வீரரட்ண அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்குச் செல்பவர்கள் அடையாள அட்டை, பிறப்பத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமை தொடர்பான சான்றிதழ் பத்திரம், தொழில் சார் தகைமை தொடர்பான சான்றிதழ் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ், நற்சான்றிதழ் இரண்டு ஆகியவற்றை எடுத்துவரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர் முகப்பரீட்சை அன்றையதினம் 1 30 மணிக்கு நடைபெறும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

## 2-ம் லெப். மாதங்கி (சுமதி)

பிறப்பு:
1970. 12. 21

வீரச்சாவு:
1990. 08. 05

மாதவத்தின் பயனேபோல் இம்மாநிலத்தில் வந்துதித்த - எங்கள்
மாணிக்கம் சுமதியவள், மானத்தின் செல்வி ஓர்
மாதங்கி எனும்பெயர் தாங்கி, கோட்டையிலே புகழ் நாட்டி
மாவீரர் எனவாகி ஆண்டுகள் மூன்று ஆனதின்று.

புயலிற்கும் உதிராத
புலியான பூவொன்று - வீர
வயலுக்கு விதையாக - களப்

# நினைவு கூருகின்றோம்...

## 1993-08-05

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்காப்படையினரால சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

★ **ஜெயா/அம்மான்** [பூபாலசிங்கம ஜெகதீஸ்வரன் - ஊரெழு - யாழ்]

1989 ஆம்ஆண்டு மட்டு - ஒட்டமாவடியில இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ஜெமில்** [ஜெயாத் முகம்மது உசைதீன் - ஒட்டமாவடி - மட்டு]

1990ஆம் ஆண்டு கோட்டையில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**லெப் அநுரா** [கௌரி தம்பஐயா - பாக்கியபவனம், ஆரையம்பதி - மட்டு]

**கப்டன் யசோதரன்** [மணியம் கிருஷ்ணதாஸ் - கற்பகபுரம், பம்பைமடு - வவுனியா]

**லெப். நெல்சன்** [இராசலிங்கம் சிவகெங்காதரன் - ஜெயந்திநகர் - கிளிநொச்சி]

**பிலிப்ஸ்** [கெ. ஜெயச்செல்வம் - கடியவுவிதிதோட்டம், கொத்மலை - கண்டி]

**கப்டன் விக்னம்** [கந்தையா தவராசா - உடுத்துறை வடக்கு - தாளையடி]

**கப்டன் ஜொனி** [தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ் - திருநெல்வேலி வடக்கு - யாழ்]

**கப்டன் கண்ணாடி/கண்ணன்** [கந்தப்பிள்ளை அருட்செலவன் - கோண்டாவில் - யாழ்]

**கப்டன் றொபின்** [திருஞானசம்பந்தர் கருணாநிதி-தும்பளை- பருத்தித்துறை]

**கப்டன் ஜோண்சன்** [செல்வராஜா பஞ்சமனோகரன் - கோணேஸ்வரன்வீதி - வல்வெட்டித்துறை]

**லெப். மோகன்** [பாலசுப்பிரமணியம் பாலேந்திரன் - பனமுடஉடையார் ஒழுங்கை - பருத்தித்துறை]

**லெப். நிசாந்தன்** [செல்லையா அன்பழகன்-மணற்பகுதி, புத்தூர்கிழக்கு - யாழ்]

**லெப் புரட்சிமாறன்** [இராசநாயகம் தேவசகாயம் - மானிப்பாய் - யாழ்]

**லெப். சங்கீதா** [றேணுகா கனகசுந்தரம் - திருநெல்வேலி கிழக்கு - யாழ்]

**2-ம் லெப். மாதங்கி** [சுமதி மாணிக்கம் / வராத்துப்பளை - பருத்தித்துறை]

**2-ம் லெப். அலிப்** [வேலுப்பிள்ளை ஜெயபாஸ்கரன்- ரேவடி - வல்வெட்டித்துறை]

**2-ம் லெப் எட்றிச்** (அருணகுலசிங்கம் குமாரகுலசிங்கம்- என். எம். வீதி - பருத்தித்துறை)

**2-ம் லெப். சபேசன்** [செந்திவடிவேல் ரஞ்சிதகுமார் - காங்கேசன்துறைவீதி - வல்வெட்டித்துறை]

**2-ம் லெப். நிசாந்தன்** [விசுவலிங்கம் செல்வகுமார் - தும்பளை - பருத்தித்துறை]

**2-ம் லெப். சரத்பாபு** [கந்தசாமி அகிலேஸ்வரன் - கொக்குவில் கிழக்கு - யாழ்]

**2-ம் லெப். யோகன்/லோசன்** [முத்துலிங்கம் சுரேசலிங்கம் - சுரேசலிங்கம் வீதி - பருத்தித்துறை]

**2-ம் லெப் டயஸ்** [செல்வராசா இராஜேந்திரகுமார் - இருபாலை கிழக்கு - யாழ்]

**ஜேம்ஸ்** [சற்குணராசா எத்திராஜ் - நெடியகாடு- வல்வெட்டித்துறை]

**கெனடி** [வேலுப்பிள்ளை விஜயகுமார் - யாக்கரை, கரவெட்டி கிழக்கு - யாழ்]

**சீலன்/கண்ணன்** [சுப்பிரமணியம் திருவருள்மூர்த்தி - பொலிகண்டி - வல்வெட்டித்துறை]

**அனீபா** [வடிவேலு உதயகாந்தன் - மட்டுவில் வடக்கு. சாவகச்சேரி - யாழ்]

**வசிட்டன்** [சடையன் சுந்தரராஜன் - புத்தூர் கிழக்கு புத்தூர் - யாழ்]

**சந்துரு** [இராசையா திருமாறன் - மண்டான்' கரணவாய் மேற்கு - யாழ்]

**பில்லா** [அல்போன்ஸ் யேசுநாயகம் - முள்ளியான், வெற்றிலைக்கேணி - யாழ்]

**விபுலன்/விமலன்** [பிரான்சிஸ் சேவியர் கலிஸ்ரர் யோண்

## மலையக பெற்றோர்

# அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதில் சிரமம்

(கொழும்பு)

தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை வேண்டுமென கோரப்படும் அதேசமயம், பிரஜா உரிமைப் பத்திரம் இருந்தால் தான் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பம் தர முடியும் என்று கிராம சேவகர்கள் கூறுகின்றனராம்.

# 2-ம் ஆண்டு நீங்காத நினைவுகள்



மாணிக்க முத்தாக
17- 10- 1973

மறத்தலைவர் சொத்தாக
05 08- 1991

## வீரவேங்கை ஜெயசிந்த் / சரண்ராஜ்

[குலசிங்கம் கபிலன்]
(யாழ். இந்துவின் மைந்தன்)

ஈராண்டு சென்றாலும்
எம் இதயத்தில் நீங்காது நிற்கின்றாய்!
ஆகாயம் கடல் வெளி எங்கும் தேடுகின்றோம்
எழுந்து வா! மீண்டும் எழுந்து வா!

இவருடன் வீரச்சாவு அடைந்த அனைத்து மாவீரர்களிற்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

82 A, சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

( இ )

**ஜோண்** (இராசப்பு விஜயதாசன் - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

**2-ம் லெப். அசாவேதிரி** (ஜானகி கனகரத்தினம் - சோழியாகுளம், ஓமந்தை - வவுனியா)

**சித்திரன்** (சிவசுந்தரலிங்கம் சிவகாந்தன் - பூவரசங்குளம் - வவுனியா)

**சங்கீதா** (மேரி காளிமுத்து - ஆலங்குளம், கனகராயன் குளம் - வவுனியா)

**கப்டன் ராஜாராம்** (கருப்பையா முத்துராசா - வண்ணாங்குளம், அடம்பன் - மன்னார்)

**லெப். காண்டேல்** (முத்தையா சந்திரகுமார் - பல்லவராயன்கட்டு, பூநகரி - மன்னார்)

**லெப். நீதி** (நடராசா ஜெயராசா - 8-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

**2-ம் லெப். சில்வா** (தங்கவேல் நாகராசா - கன்னாட்டி, கூழாங்குளம் - மன்னார்)

**2-ம் லெப். வெற்றிச்செல்வன்** (ஸ்ரனிஸ்லொஸ் நிகிதராஜ் - 6-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

**2-ம் லெப். சதானந்தன்** (சேனாதிராஜா கேதீஸ்வரன் - பொன்னாவெளி - மன்னார்)

**வர்மா** (சோமசுந்தரம் சிவசுதன் - அத்தாய் - பூநகரி)

**கேடில்ஸ்** (சிறில் கிளேற்றன் - புகையிரத நிலையவீதி - மன்னார்)

வவண்டிங்கடிகாரங்கள 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங் கள 125/- எலெக்ரோனிக் கடி காரங்கள் 90/-, 150/-மேசை சுவர்பணிக்கூடுகள் 100 200/- றேடியோமட்டும் 150/- கசற் றேடியோ— 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப் பாணம். (சி/7113)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

மூணை கடற்தொழிலாளர் சிசன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின்வருடாந்த பொதுக் கூட்டம் இன்றுமாலை 3 மணிக்கு நடை பெறும். (யோ)

## கணித பாட செயலமர்வு

(வடமராட்சி)

கரவெட்டி பொன்னம்பலம் வித்தியாலயத்தில் கணிதபாட செயலமர்வு ஒன்று கடந்த திங் கட்கிழமை மாலை பாட சாலை மண்டபத்தில் நடை பெற்றது இச்செயலமர்வில் சுமார் 150 மாணவர்கள் கல ந்து கொண்டனர். (யோ)

## நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகராட்சி மன்றத் தின் சைவ சமய விவகாரக் குழுவின் ' நல்லைக் குமரன் மலர்'' எனும் நூல் வெளி யீட்டு நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி 2 30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடை பெறவுள்ளது

இந்நிகழ்விற்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம தலைமை வகிக்கின்றார்.

## தையல் பயிற்சி ஆரம்பம்

(யாழ்பபாண )

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் பிரிவு நடாத்தும் 1993 ஜூலை- டிசெம்பர் வரைக்கானதையல் பயிற்சி பருத்தித்துறைப் பிரிவுக் காரியாலயத்தில் (இ. போ. சபைக்கு முன்பாக) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் சேர விரும்பும் மாண வர்கள் உடனடியாக அலுவலகத் தையல் பயிற்சி ஆசிரியை திருமதி இ. பத்மநாதன் அவர்களைச் சந்தித்து அனுமதி பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பருத் தித்துறைப் பிரிவு நடாத்தும் மூன்றாவது தையல் பயிற்சி இதுவாகும்.

தொண்டமானாறிலும், வல் வெட்டித்துறையிலும் இது நடாத்திய பின்பு பருத்தித் துறையில் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

## 2ம் லெப். மாதங்கி (சுமதி)

பிறப்பு:
1970. 12. 21

வீரச்சாவு:
1990. 08. 05

மாதவத்தின் பயனேபோல் இம்மாநிலத்தில் வந்துதித்த - எங்கள்
மாணிக்கம் சுமதியவள், மானத்தின் செல்வி ஓர்
மாதங்கி எனும்பெயர் தாங்கி, கோட்டையிலே புகழ் நாட்டி
மாவீரர் எனவாகி ஆண்டுகள் மூன்று ஆனதின்று.

புயலிற்கும் உதிராத
புலியான பூவொன்று - வீர
வயலுக்கு விதையாக - களப்
பலியான நினைவின்று.

கோட்டையில் இவருடன் வீரச்சாவெய்திய 26 போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

- குடும்பத்தினர்

சுமதி (மாதங்கி) வீதி,
வராத்துப்பளை,
பருத்தித்துறை. (5620)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
13.01 1969

தாயக மண்ணில்:
05.08.1991

## வீரவேங்கை சுரேஷ்

[சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன்]

கடல் கடந்து வந்தவர் முன் களமாடி நின்றாய்!
உடல் நடுங்க வந்த படை உடைந்திடச் செய்தாய்!
விடம்கொண்ட வீணரின் விழிகளை நிறுத்தினாய்!
திடங் கொண்ட புலியென தகர்த்தெறிந்துள் நுழைந்தாய்!

ஆனையிறவு மண்ணிலே உன் இறுதிப் பேச்சு!
ஆகாய கடல்வெளி யெங்கும் உன் பேச்சு!
ஆர்த்தெழுந்த புலி உன் ஆவேச வீச்சு!
ஆண்டிரண் டாயினும் மறந்திடாத தாச்சு!

உன் பிரிவால் துயருறும்!
— குடும்பத்தினர்

கொட்டடி,
யாழ்ப்பாணம். [சி/7132]

2-ம் லெப். சபேசன் [செந்திவடிவேல் ரஞ்சிதகுமார் - காங்கேசன்துறைவீதி - வல்வெட்டித்துறை]
2-ம் லெப். நிசாந்தன் [விசுவலிங்கம் செல்வகுமார் - தும்பளை - பருத்தித்துறை]
2-ம் லெப். சரத்பாபு [கந்தசாமி அகிலேஸ்வரன் - கொகிகுவில் கிழக்கு - யாழ்]
2-ம் லெப். யோகன்/லோசன் [முத்துலிங்கம் சுரேசலிங்கம் - சுரேசலிங்கம் வீதி - பருத்தித்துறை]
2-ம் லெப் டயஸ் [செல்வராசா இராஜேந்திரகுமார் - இருபாலை கிழக்கு - யாழ்]
ஜேம்ஸ் [சற்குணராசா எத்திராஜ் - நெடியகாடு- வல்வெட்டித்துறை]
கெனடி [வேலுப்பிள்ளை விஜயகுமார் - யாக்கரை, கரவெட்டி கிழக்கு - யாழ்]
சீலன்/கண்ணன் [சுப்பிரமணியம் திருவருள்மூர்த்தி - பொலிகண்டி - வல்வெட்டித்துறை]
அனீபா [வடிவேலு உதயகாந்தன் - மட்டுவில் வடக்கு சாவகச்சேரி - யாழ்]
வசிட்டன் [சடையன் சுந்தரராஜன் - புத்தூர் கிழக்கு புத்தூர் - யாழ்]
சந்துரு [இராசையா திருமாறன் - மண்டான்' கரணவாய் மேற்கு - யாழ்]
பில்லா [அல்போன்ஸ் யேசுநாயகம் - முள்ளியான், வெற்றிலைக்கேணி - யாழ்]
விபுலன்/விமலன் [பிரான்சிஸ் சேவியர் கலிஸ்ரர் யோண்சன - 8-ம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி - யாழ்]
மாதுரி [றஞ்சினிதேவி இரத்தினசாமி - பாஸ்கரானந்த வேல் இல்லம், கார்த்திக்வீதி-வல்வெட்டித்துறை]

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

மட்டு - ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டும், காணாமலும் போன சிற்பக் கலைஞர்களான 04 தமிழர்கள்.

யாழ். பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 6 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் நடைபெற்ற ஆ. க. வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரையான இராணுவச் சங்கிலித் தொடர் மீது புல்லாவெளிச் சந்தியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ஜமுனா [சிவஜோதி இராமச்சந்திரன் - திருக்கோயில் - அம்பாறை]
நிசாம் (கந்தராசா தர்மராசா - திருக்கோயில் - அம்பாறை)
லெப். ரஹீம் [சிவக்கொழுந்து யோகநாதன் - பெரிய புல்லுமலை - மட்டு]
2-ம் லெப். அலன் [கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் - ஆறுமுகத்தான் குடியிருப்பு - மட்டு]
சுதா [கந்தையா குணநாதன் - கிண்ணியடி, வாழைச்சேனை - மட்டு]
ககாலின் [செல்வராசா ரட்ணகாந்தன் - ஏறாவூர் - மட்டு]
ஆதித்தன் (இராமசாமி கஜேந்திரன் - மாமங்ககொலனி, வாழைச்சேனை - மட்டு)
லெப். லலிதா (இரஞ்சிதமலர் பாலசுந்தரம் - தம்பலகமம் - திருமலை)
2-ம் லெப். சீலன் (வெங்கடாசலம் சிவானந்தன் - கங்குவேலி, மூதூர் - திருமலை)
2-ம் லெப். சபேசன் (தர்மரத்தினம் திருத்தணி - கங்குவேலி, மூதூர் - திருமலை)
கபில் (சித்திரவேலாயுதம் சசிக்குமார் - திருமால்வீதி - திருமலை)
சீனு (மணியம் சிவராசன் - பாலம்போட்டாறு. தம்பலகமம் - திருமலை)
நிவேதா (சிவச்செல்வி சிவபாதம் - 104, யூதாகோயிலடி லிங்கநகர் - திருமலை)
லெப். கலைச்செல்வன் (துரைசிங்கம் ரமேஸ் - வட்டுவாகல் - முல்லைத்தீவு)
ரொமேஸ் (வடிவேல் முத்துக்குமார் - உடையார்கட்டு - முல்லைத்தீவு)
ஜோண் (இராசப்பு விஜயதாசன் - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)
2-ம் லெப். அசாவேதிரி (ஜானகி கனகரத்தினம் - கோழியாகுளம், ஓமந்தை - வவுனியா)
சித்திரன் (சிவசுந்தரலிங்கம் சிவகாந்தன் - பூவரசங்குளம் - வவுனியா)
சங்கீதா (மேரி காளிமுத்து - ஆலங்குளம், கனகராயன்குளம் - வவுனியா)
கப்டன் ராஜாராம் (கருப்பையா முத்துராசா - வண்ணாங்குளம், அடம்பன் - மன்னார்)
லெப். காண்டேல் (முத்தையா சந்திரகுமார் - பல்லவராயன்கட்டு, பூநகரி - மன்னார்)
லெப். நீதி (நடராசா ஜெயராசா - 8-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)
2-ம் லெப். சில்வா (தங்கவேல் நாகராசா - கன்னாட்டி, கூழாங்குளம் - மன்னார்)
2-ம் லெப். வெற்றிச்செல்வன் (ஸ்ரனிஸ்லொஸ் நிகிதராஜ் - 6-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)
2-ம் லெப். சதானந்தன் (சேனாதிராஜா கேதீஸ்வரன் - பொன்னாவெளி - மன்னார்)
வர்மா (சோமசுந்தரம் சிவசுதன் - அத்தாய் - பூநகரி)
கேடில்ஸ் (சிறில் கிளேற்றன் - புகையிரத நிலையவீதி - மன்னார்)
கப்டன் லக்சி (தங்கராணி முத்துலிங்கம்-வேம்படி, உடுத்துறை, தாளையடி, யாழ்.)
லெப். நித்தி (கிருஷ்ணபிள்ளை தவரத்தினம்-கரம்பைக் குறிச்சி, வரணி-கொடிகாமம்)
லெப். வாசு (பொன்னுத்துரை இந்திரகாசன்-வண்ணார்பண்ணை-யாழ்.)
லெப். மாமன்னன் (அம்பலவாணர் பரமேஸ்வரன்-களபூமி-காரைநகர்-யாழ்.)
2ஆம் லெப். நாராயணன் (நாகமுத்து யோகலிங்கம்-புனிதநகர், சுற்கோவளம்-பருத்தித்துறை)
மதிவாணன் (தர்மலிங்கம் தனேஸ்வரன் - மல்லாகம் வீதி, சங்கானை - யாழ்.)
சுரேஸ் (சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன் - முத்தமிழ் வீதி, கொட்டடி-யாழ்.)
சதீஸ்குமார் (தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம்-மாசார்-பளை)
மது (மணிவாசகம் வரதராயன்-வட்டுக்கோட்டை கிழக்கு-யாழ்.)
பீற்றர் (நாணுநாயகர் ஜெயராஜ்-பருத்தித்துறை வீதி, யாழ்)
கணபதிப்பிள்ளை (சுப்பையா குமாரவடிவேல்-பனிச்சையடி-இயக்கச்சி)
ஜெயசிந்த்/சரண்ராஜ் (குலசிங்கம் கபிலன்-82ஏ, சீனியர் ஒழுங்கை, கலட்டி-யாழ்.)
சகுந்தலா (மேரி எமல்டா வில்லியம் மரியதாஸ்-பண்டத்தரிப்பு - யாழ்)
கவிதா/கென்சியா (கெலன் தேவநாயகம் - பெரியவிளான், இளவாலை - யாழ் )
நிதி (வசந்தமலர் செல்லத்துரை – கச்சாய் தெற்கு, கொடிகாமம்-யாழ்.)
விஜிதா (பத்மாதேவி நன்னித்தம்பி - கலைவாணிவீதி, சித்தன்கேணி-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7130)

## அந்தியேட்டி அழைப்பிதழ்

06-08-1993



அமரர்

## திரு. S.K. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய விதானையார்)

**தோற்றம்: 06-06-1917 மறைவு: 07-07-1993**

07-07-93 -ல் அமரராகிவிட்ட எனது தந்தையாரின் அந்தியேட்டி கிரியைகள் 06-08-93 -ல் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியடி. விஜயகுமார் குடும்பத்தினர்.

(3441)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கசினோ மன்னர்கள் மீண்டும் கொழும்பில்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பதவிக் காலத்தின் போது நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட கசினோ மன்னன் ஜோசிம் உட்பட பல கசினோக்காரர்கள் அண்மையில் கொழும்புக்கு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதையடுத்து கொழும்பில் மீண்டும் கசினோக் கடைகள் திறக்கப்படலாம் என்று ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

## காலி சீமெந்து தொழிற்சாலை தமிழ் ஊழியர் இடமாற்றம்

(கொழும்பு)


காலி ருஹுணு சீமெந்துத் தொழிற்சாலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வேலைபார்த்து வந்த நான்கு தமிழ் ஊழியர்கள் நிருவாகத்தால் திடீரென அங்கிருந்து காங்கேசன்துறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை 11 மணியளவில் இத் திடீர் உத்தரவு வழங்கப்பட்டதெனவும் ஒரு மணி நேரத்திற்குள் விடுதியைவிட்டு வெளியேறவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர்கள் தொழிற்சாலையைவிட்டுகாலி ஆலயத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர் என்றும் பின்னர் கொழும்பு வந்து சேர்ந்தனர் என்றும்-

இவர்கள் முன்னர் காங்கேசன்துறையில் வேலை செய்தவர்கள் என்றும் இடமாற்றத்திற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லையெனவும் நான்கு ஊழியர்களும் தெரிவித்தனர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



05-08-1990 அன்று யாழ். கோட்டையில் வீரச்சாவு அடைந்தவரும் முன்னாள் வடமராட்சி கிழக்கு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளருமாகிய

## கப்டன் விக்னம் (கந்தையா தவராசா)

தாயின் மடியில் 07-08-1968 தாயக மீட்பில் 05-08-1990

ஆண்டுகள் ஆறு உந்தன் அண்ணனின் பாசறையில்
ஆற்றினாய் பெரும் பணிகள் தமிழ் அன்னையின் விடுதலைக்காய்
களம்பல கண்டு வந்தாய் கடற்படைக் கப்பல் வென்றாய்
கொடுமை கொள் சிங்களவலின் குண்டு துளைத்ததுவோ.

அன்று கோட்டையிலே புலிக்கொடியை நாட்டும் உன் ஆசை
இன்று குறிதவறாப் புலிகள் கூட்டம் நிறைவு செய்தனரே
நூற்றுக்கு மேல் புலிகளை நாம் பறிகொடுத்தாலும்
வேற்று நாட்டான் கோட்டை இன்று யாழில் இல்லையே!

இவருக்கும் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு, 05-08-1993 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 3-ம் ஆண்டு அஞ்சலி நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகள், விடுதலைப்புலிகள் மகளிர் அணியினர், பொதுமக்கள், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
வடமராட்சி கிழக்கு.

தகவல்;
அம்மா, ஐயா,

## இடமாற்றம்

(வடமராட்சி கிழக்கு)

தாளையடி பங்குத்தந்தை அருட் திரு. எம். டேவிட் பாஷையூர் பங்குத் தந்தையாக இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

வலைப்பாடு பங்குத்தந்தை அருட் திரு. சேவியர் கருணாரட்ணம் தாளையடி பங்குத் தந்தையாக இடமாற்றலாகியுள்ளார்.

### யாழ். பல்கலைக்கழகம் இசைமாணி/நாட்டியமாணி இசைமணி/நாட்டியமணி (டிப்புளோமா) கற்கை நெறிகளுக்கான 1992/1993 அனுமதிகள்

மேற்படி அனுமதிக்கான செய்முறை, நேர்முகப் பரீட்சைகள் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இவற்றுக்கான நேர அட்டவணை, அனுமதி அட்டை என்பன தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர அட்டவணை, அனுமதி அட்டை என்பன கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும் உடன் தொடர்பு கொள்ளலாம்.

-பதிவாளர்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 2ஆம் லெப்டினன்ட் டயஸ்

செல்வராசா ராஜேந்திரகுமார் (பாபு)

தாயின் மடியில்: 18-12 1971 கோட்டையின் கொத்தளத்தில்: 05-08-1990


தமிழன்னைக்காக தலைமகன் நீயும்
எதிரியின் கொத்தளம் ஏறிய வீரமும்
உறுதியின் உயர்வும் அன்பின் உருவமும்
இதயம் நிறைந்து விழிகளை அடைக்கும்
உந்தன் நினைவுகள் ஆண்டு மூன்றாயின
இலட்சிய தீபமே! எம் இதயத்துள் ஒளிர்வாய்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

-குடும்பத்தினர்
(5611)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
02
–
12
–
1971



தாயக மண்ணில்
05
–
08
–
1991

## லெப். வாசு

[பொன்னுத்துரை இந்திரகாசன்|இந்திரன்]

முப்படை முன்றலில் மூச்சுடன் எழுந்தாய் !
எப்படை தோன்றினும் எதிர்த்திடுவோ மென்றாய் !
கொலைப்படை யணியினை குலைத்து நீ அழித்தாய் !

நடைபெறும். அன்னாரது அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியடி. விஜயகுமார் குடும்பத்தினர்.

(3441)

தாயின் மடியில் 07-08-1968 தாயக மீட்பில் 05-08-1990

ஆண்டுகள் ஆறு உந்தன் அண்ணனின் பாசறையில்
ஆற்றினாய் பெரும் பணிகள் தமிழ் அன்னையின் விடுதலைக்காய்
களம்பல கண்டு வந்தாய் கடற்படைக் கப்பல் வென்றாய்
கொடுமை கொள் சிங்களவனின் குண்டு துளைத்ததுவோ.

அன்று கோட்டையிலே புலிக்கொடியை நாட்டும் உன் ஆசை
இன்று குறிதவறாப் புலிகள் கூட்டம் நிறைவு செய்தனரே
நூற்றுக்கு மேல் புலிகளை நாம் பறிகொடுத்தாலும்
வேற்று நாட்டான் கோட்டை இன்று யாழில் இல்லையே!

இவருக்கும் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு, 05-08-1993 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 3-ம் ஆண்டு அஞ்சலி நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகள், விடுதலைப்புலிகள் மகளிர் அணியினர், பொதுமக்கள், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
வடமராட்சி கிழக்கு.

தகவல்;
அம்மா, ஐயா,
சகோதரர்கள்.

[5515]

மேற்படி அனுமதிக்கான செய்முறை, நேர்முகப் பரீட்சைகள் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இவற்றுக்கான நேர அட்டவணை, அனுமதி அட்டை என்பன தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர அட்டவணை, அனுமதி அட்டை என்பன கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும் உடன் தொடர்பு கொள்ளலாம்.

—பதிவாளர்

(சி-7127)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை பில்லா
**[அ. யேசுநாயகம் - ரவி]**

[வெற்றிலைக்கேணி - முள்ளியான்]

பிறப்பு: 22-06-70 வீரச்சாவு: 05-08-90

வீரத்தின் பிறப்பிடத்தில்
வேங்கைகள் பல உதித்த
வெற்றிலைக்கேணி பெற்றெடுத்த
வீரப் பெருமகன் தான் ரவி

தமிழ்த் தாயின் துயர் போக்க
தனயன் வழி சென்றான்
தன் அன்னையிட்ட நாமத்தை மாற்றி
தனயன் வழியில் பில்லாவானான்

அன்னியன் கொட்டத்தை அடக்க
புறப்பட்டான் கோட்டை தனிலே
சிங்களவனைப் பொடிப் பொடி யாக்கி
மாவீரர் வரிசையில் கலந்துவிட்டான்.

வீறுநடை போட்ட கண்ணான கண்மணியே
வேங்கையாகிப் பிறந்த பொன்னான திருவுருவே
உன்னுடன் மரணித்த மாவீர அனைவர்க்கும்
எம் கண்ணீர் அஞ்சலிகள்.

செம்பியன் பற்று,
வடக்கு.

(5574)

குடும்பத்தினர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். சங்கீதா
**(செல்வி ரேணுகா கனகசுந்தரம்)**

மலர்வு: 04-09-1874 வீரச்சாவு: 05-08-1990

அன்பின் திருவுருவே!
பண்டையத் தமிழர்கள் ஆண்டிட்ட கோட்டையை
அன்னியன் குடிகொள்ளல் ஆகுமோ - என
வீரம் கொட்டியே எழுந்திட்ட வேங்கையே
மானமே உயிராய் மதித்திட்ட சங்கீதா
உனது கனவுகள் தமிழீழத்தில் மலரும்.


05-08-90 இல் இவருடன் யாழ். கோட்டையில் வீரச்சாவடைந்த சகலருக்கும் எமது அஞ்சலிகள்.

சங்கீதா வீதி,
(இராமலிங்கம் வீதி.)
திருநெல்வேலி கிழக்கு.

- குடும்பத்தினர்.

(5610)

தாயின் மடியில் 02 - 12 - 1971



தாயக மண்ணில் 05 - 08 - 1991

## லெப். வாசு
[பொன்னுத்துரை இந்திரகாசன் / இந்திரன்]

முப்படை முன்றலில் மூச்சுடன் எழுந்தாய்!
எப்படை தோன்றினும் எதிர்த்திடுவோ மென்றாய்!
கொலைப்படை யணியினை குலைத்து நீ அழித்தாய்!
புலிப்படை வீரம் இதுவென நீஉரைத்தாய்!

நிலாமுகம் கொண்ட உனை நினைவில் நிறுத்துகிறோம்!
உலாவரும் புலிகளிடை உனைக் காண்கின்றோம்!
தலாஒரு புலியாய் தாகத்துடன் எழுவோம்!
இலாதுபகை ஒழித்தே ஈழத்தமிழ் காப்போம்!
இந்திரனே! எம் இதயத்தில் என்றும் நீ!...

உம் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பாரதி வீதி,
கில்னர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

— குடும்பத்தினர்

(சி-7128)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 24 02-1974

வீரச்சாவு: 29-07 1991

## வீரவேங்கை இராஜன்
[குமாரசாமி குணராசா]

(ஆனையிறவுதடை முகாம்மீது 2-வது மோதலில் வீரச்சாவடைந்தார்)

திதி 05-08-1993

குடாநாட்டின் கழுத்தை நெரிக்கும்
படைகளின் கொட்டம் அடக்க
விடாமுயற்சியுடன் முயன்ற வேங்கையே!
ஆண்டுகள் இரண்டு போன பின்னாலும்
நீண்டுவரும் உன் நினைவு
நிழலாய் தொடர்ந்து வரும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு.

(சி/7115)

— குடும்பத்தினர்

# மண்ணெய் வராமைக்கு கொள்கலன் காரணமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய பொருள்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் போதிய இடவசதியோ, கொள்கலன் வசதியோ இல்லாமை மற்றும் வெற்றுப் பீப்பாக்கள் போதியளவு இன்மை இதனாலேயே ஒரே தடவையில் முழுத்தேவைகளுக்குமுரிய மண்ணெண்ணெயை ஏற்றிவர முடியாமல் உள்ளதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம் அறிவித்த அளவில் மண்ணெண்ணெயை யாழ். குடாநாட்டிற்கு அனுப்பி வைப்பதில் இவையே இடையூறுகளாக உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே சமயம், பருத்தித்துறை துறைமுகத்தில் மண்ணெண்ணெயை நிரப்பி வைத்திருக்கக் கூடிய பெரிய தாங்கி வசதி எதுவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாதம் ஒன்றிற்கு 5000 பீப்பா மண்ணெண்ணெய் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் மிகக் குறைந்தளவிலான மண்ணெண்ணெயே இங்கு வந்து சேருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (தி), (பா).

# அரசுக்கு எதிரானோர் உயிருக்கு பாதுகாப்பில்லை

**-பாலா தம்பு அறிக்கை**

(கொழும்பு)

அத்துலத்முதலியின்கொலையிலிருந்து ஒரு முக்கிய பாடத்தை நாம் படிக்கக் கூடியதாக இருக்கிறது. சிறிலங்காவில் அரசுக்கு எதிராக தமது ஜனநாயக உரிமையை இன்று எக்காரணத்துக்காக எவர் பாவித்தாலும், அவர் பொலிசாரின் அனுமதியுடன் செயற்பட வேண்டும். அல்லது அவர் தனது சொந்த அபாயத்தை எதிர்பார்த்தே செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு இலங்கை வர்த்தக, கைத்தொழில், பொதுச் தொழிலாளர் சங்கத்தின் [சி. எம். யூ] பொதுச்செயலாளர் பாலா தம்புவின் பத்திரிகை அறிக்கை ஒன்று கூறுகிறது.

அத்துலத்முதலி ஓர் அமைச்சராக இருந்து யு. என். பி கூட்டம் ஒன்றில் பேசியிருந்தால் அவர் உயிரோடு இருந்திருப்பார். அரசுக்கு எதிரான பிரதான அரசியல் எதிரியாக மாறாமல் அவர் இருந்திருந்தால் அவருக்கு பொலிஸ்பாதுகாப்பும், விசேட இராணுவப் பாதுகாப்பும் அரசினால் வழங்கப்பட்டிருக்கும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே நேரத்தில் செயற்குழுகூட்டங்கள்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் தமது கட்சிகளின் செயற்குழுக் கூட்டங்களை நேற்று ஒரே நேரத்தில் கூட்டியுள்ளனர்.

அண்மைக் காலங்களில் இவ் இரு கட்சிகளின் உயர் தலைவர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுக்களை தமது செயற் குழுவினருக்கு தெரிவிக்கவே இந்தக் கூட்டங்கள் கூட்டப்பட்டதாக தெரியவருகின்றது.

இதே வேளை இவ் இரு கட்சிகளும் ஒன்றுடன் ஒன்று இணையும் சாத்தியக் கூறுகள் அதிகரித்து இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## அரசியல் கொலைகள்பற்றிய விசாரணைக் குழு தேவை

-ஒஸி கோரிக்கை

லலித் அத்துலத்முதலி, டென்சில் கொப்பேகடுவ, விஜயவிமலரத்தன, விஜய குமாரணதுங்க ஆகியோரின் கொலைபற்றி விசாரணை நடத்த குழு ஒன்றை அமைக்குமாறு சிறிலங்கா மக்கள் கட்சித் தலைவர்களில் ஒருவரும் பிரேமதாசாவிற்கு மிக நெருங்கியவருமான ஒஸி அபயகுணசேகர சிறிலங்கா பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த குழுவிடம் தானும் சாட்சியம் அளிக்கப்போவதாகவும் அப்போது பல தகவல்களை வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

''லலித் அத்துலத் முதலியின் கொலை பற்றி ஸ்கொட்லண்ட் யார்ட் சமர்ப்பித்த அறிக்கை பற்றி எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். எனவே ஒரு விசாரணைக் கமிஷன் நியமிப்பது அவசியமாகிறது. அப்போது லலித்தின் உண்மையான நண்பர்கள் யார் போலி நண்பர்கள் யார் என்பது தெரியவரும்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

## லலித் குடும்பம் அமெரிக்காவுக்கு

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர் லலித் அத்துலத் முதலியின் பாரியார் திருமதி சிறிமானியும் அவரது மகள் சேராவும் அமெரிக்காவிற்கு பயணமாகியுள்ளனர்.

நாட்டை விட்டுப் புறப்பட முன்பு அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் அரசியலில் பிரவேசிக்கப் போவதில்லை எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மொழித் தேர்வில் தேறியோருக்கு பரிசுகள்

(யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட முன்னோடித் தேர்வில் தமிழ்ப்பாடத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு, மாவட்டத்தில் மூன்று பேருக்கும் கோட்ட மட்டத்தில் ஒவ்வொரு வருக்கும் பணப்பரிசு வழங்க விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகம் தீர்மானித்துள்ளது:

அதனடிப்படையில் மாவட்டத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களும் பரிசுகளும்:

ஈ.குமரன் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி) முதலாம் இடம். 3000 ரூபா பரிசும், ந. மாலதி அதேபாடசாலை இரண்டாம் இடம் 2000 ரூபாவும் பரிசும், ச. சத்திய ரூபி, அதேபாடசாலை மூன்றாம் இடம். சி. மாதினி அதே பாடசாலை 1000 ரூபாவும் பரிசும் வழங்கப்பகின்றது.

கோட்டமட்டத்தில் முதலிடத்தை பெறுபவர்களுக்கு முறையே 1000 ரூபா பரிசு வழங்கப்படுகின்றது. இதன் விபரம் வருமாறு

யாழ். கோட்டம் சிவஜா- யா/இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி கோட்டம் பா, கோமதி யா டிறிபேக் கல்லூரி, வேலணைக் கோட்டம் த. சுபாஜினி யா/ மண்டைதீவு மகாவித்தியாலயம். வடமராட்சிக் கோட்டம் த. சுகந்தி யாழ்/ உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, பண்டத்தரிப்புக்கோட்டம் ம. றுபேசினியா/ இளவாலை கன்னியர் மடம். இதே கோட்டத்தைச் சேர்ந்த ச. ஐங்கரன் யா/ யாழ்ப்பாணக் கல்லூரி, மருதனார்மடக்கோட்டம் த. தவனேஸ்வரி யாழ். இராமநாதன் கல்லூரி.

# கைதிகளின் விடுதலையில் அரசுக்கு ஆர்வமில்லை

– டயஸ் சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

எமது பிள்ளைகளை விடுவிக்க அரசோ, செஞ்சிலுவைச் சங்கமோ முயற்சிப்பதாக தெரியவில்லை. யுத்தக்கைதிகள் விடுதலை தொடர்பாக கடந்த முறை எடுக்கப்பட்ட முயற்சிகள் பயன்தராது போய்விட்டமைக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இவ்வாறு போர்க் கைதியாக யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸார் ஒருவரின் தந்தையார் பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் வீரசேகர யாழ்ப்பாணம் வந்த போது போர்க் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், இப்போது அவர்கள் கைதிகளாக இல்லை என்றும் கூறினார். கைதிகளை விடுவிக்க கப்பலில் பொருள்கள் யாழ்ப்பாணம் அனுப்பப்படுவதாக கூறினர் பின்னர் கப்பலை காங்கேசன்துறைக்கு திசை திருப்பினர் புலிகள் பொருள்களை அதிகமாக அனுப்புமாறு நிபந்தனை விதிப்பதாக காரணம் கூறப்பட்டது. ஆனால் புலிகள் அப்படி கோரியிருப்பார்கள் என நான் நினைக்கவில்லை.

இதில் யார் குற்றவாளிகள் என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் டயஸ் சில்வா என்ற அந்த சிங்கள பொதுமகன் மேலும் தெரிவித்தார்.

## மணற்காடு பீ அணி சம்பியனாகியது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 'பீ' அணி சம்பியனாக வெற்றியீட்டியது.

எட்டு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய இவ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நாளன்று மணற்காடு 'ஏ' அணியுடன் மணற்காடு 'பி' அணி மோதி, மணற்காடு 'பி' அணி 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

## விளையாட்டுப்போட்டி

(தென்மராட்சி)

தர்மக் கேணி பளை சுகந்தன் பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி இன்று தலைமைஆசிரியர் தலைமையில் பாடசாலை விளையாட்டுமை


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



கோண்டாவிலில் மலராய் 09-01-1970

கோட்டையில் வரலாறாய் 05-08-1990

**கப்டன் கண்ணன்** (கண்ணாடி)


[கந்தப்பிள்ளை அருட்செல்வன்]

எங்கள் நெஞ்சங்களில் நிறைந்த புதல்வா
மூவாண்டு ஆனது இன்றோடு நீமறைந்து
எரிமலையாகி நீ எதிரிமேற் பாய்ந்து வெற்றி
ஈட்டி நீ மறைந்தாய் ஈழத்து மண்ணிலே
இதயத்தில் உனை விதைத்து இலட்சியம் காக்கிறோம்
இறுதிவரை விடுதலைப் பயிரினை வளர்ப்போம்.

கோண்டாவில். -குடும்பத்தினர்.

((5607)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 — 01 — 1970



வீரச்சாவு 05 — 08 — 1990

**கப்டன் ஜொனி**

(தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)

ஆண்டு மூன்று கழிந்தாலும் உன்நினைவு அழியவில்லை
மீண்டு தமிழீழம் பெறவென உறுதியுடன் நின்றாய்-யாம்
கண்டிடுவோம தமிழீழமென நண்பர்கள் பணி

## 3-ம் வருட நினைவஞ்சலி

5- 08- 1993



மூவாண்டு ஆனது இன்றோடு நீமறைந்து
எரிமலையாகி நீ எதிரிமேற் பாய்ந்து வெற்றி
ஈட்டி நீ மறைந்தாய் ஈழத்து மண்ணிலே
இதயத்தில் உனை விதைத்து இலட்சியம் காக்கிறோம்
இறுதிவரை விடுதலைப் பயிரினை வளர்ப்போம்.

கோண்டாவில். —குடும்பத்தினர்.

((5607)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



1991ஆம் ஆண்டு ஆனையிறவில் நடந்த ஆ.க. வெ. சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

### கப்டன் லக்ஷி

[முத்துலிங்கம் தங்கரஜனி – சுதா]

பிறப்பு: 10. 10. 1973

வீரச்சாவு: 05. 08. 1991

பாசமகளைப் பிரிந்து பதறி நின்றோம் - அவள்
பாசறையில் வாழ்ந்தவரை தேறி நின்றோம்
தேசமதை மீட்பதற்காய்ச் சென்று மாண்ட
செய்தி வந்த பின்னால் நாம் சிறகிழந்தோம்.

வரிப்புலியில் பெண் புலிகள் வரும் வழியில் - நான்
தரித்து நின்று உன்முகத்தின் அழகு பார்ப்பேன்
சிரித்த முகத்தோடவர்கள் சென்றபின்பும் - எம்
செல்வமகள் நடையழகு தெரியுமங்கே.

05. 08. 93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி,
உடுத்துறை,
வடமராட்சி கிழக்கு.

அம்மா, அப்பா,
சகோதரர்.

(5575)

09 — 01 — 1970



05 — 08 — 1990

### கப்டன் ஜொனி

(தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)

ஆண்டு மூன்று கழிந்தாலும் உன்நினைவு அழியவில்லை
மீண்டு தமிழீழம் பெறவென உறுதியுடன் நின்றாய்-யாம்
கண்டிடுவோம தமிழீழமென நண்பர்கள் பணி
தொடர்கின்றனர்
யாண்டும் உன் நினைவு எம் நெஞ்சைவிட்டகலா.

கோட்டையில் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எம் கண்ணீர் அஞ்சலிகள்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(5617)

## 6-வது ஆண்டு நினைவு தினம்

முளையாய்: 25–04-1972



வித்தாய்: 11-08-1987

### வீரவேங்கை கருணா

[செல்லத்துரை தயாகரன்]

திதி: 05-08-1993

ஆவணியைவிட்டு நீ சென்று
ஆண்டுகள் ஆறாச்சுதே கருணா!
இன்றுந்தான் எங்கள் கண்ணீர் ஆறு வற்றவில்லை
ஈசன் பத நிழலில் உன் ஆத்மா சாந்தி அடையட்டும்.

இவருடன் வீரச்சாவடைந்த வேங்கைகளை நினைவு கூர்ந்து இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும் உற்றார், உறவினர், நண்பர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாகர்கோவில்வீதி,
எழுதுமட்டுவாள்.

உன் நினைவகலாத
அப்பா, அம்மா, சகோதரர்கள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(சி/7131)

ளாவும் அமெரிக்காவிற்கு பயணமாகியுள்ளனர்.

நாட்டை விட்டுப் புறப்பட முன்பு அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் அரசியலில் பிரவேசிக்கப் போவதில்லை எனக் கூறியிருந்தது குறிப்பிடத் தக்கது.

இப்போது அவர்கள் கைதிகளாக இல்லை என்றும் கூறினார். கைதிகளை விடுவிக்க கப்பலில் பொருள்கள் யாழ்ப்பாணம் அனுப்பப்படுவதாக கூறினர் பின்னர் கப்பலை காங்கேசன்துறைக்கு திசை

## 3-ம் வருட நினைவஞ்சலி 5- 08- 1993



### 2-ம் லெப். சரத்பாபு

(கந்தசாமி அகிலேஸ்வரன்)

தாய் மடியில் 14- 12- 1973

மண்ணின் மடியில் 05- 08- 1990

தேசம் காத்திட தீரமுடன் எழுந்த மாவீரனே
பாசம் எம்மீது எல்லையின்றி வைத்திருந்தும் -மண்
மானம் காப்பதே உன் இதயத்துடிப்பாயிருந்தது
அதனால்தான் சின்னக்கரங்களில் துப்பாக்கி ஏந்தினாய்
எல்லையில் எதிரியின் வரவுக்காய் காத்திருந்தாய்
பட்டொளி வீசிய கோட்டையில்பறந்திடும் புலிக்கொடியில்
உன் உதிரமும் உயிரும் உள்ளதுஎன்பதை எண்ணிடும்போது
உள்ளம் சிலிர்க்கிறோம் உன் பாதைவழி நடக்கிறோம்.

05- 08- 1990 அன்று கோட்டையில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து வீரவேங்கைகளுக்கும் எம் வீர அஞ்சலியை தெரிவிக்கிறோம்.

அகிலேஸ்வரன் வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

அப்பா, அம்மா
அக்கா, அண்ணா,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

(சி-7129)

விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 'பீ' அணி சம்பியனாக வெற்றியீட்டியது.

எட்டு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய இவ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நாளன்று மணற்காடு 'ஏ' அணியுடன் மணற்காடு 'பி' அணி மோதி, மணற்காடு 'பி' அணி 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

### விளையாட்டுப்போட்டி

(தென்மராட்சி)

தரிமக் கேணி பளை சுகநீதன் பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி இன்று தலைமைஆசிரியர் தலைமையில் பாடசாலை விளையாட்டுமைதானத்தில் இடம்பெறும். இதற்குவிடுதலைப் புலிகளின்மகளிர்அமைப்பு சமூகமேம்பாட்டுப் பிரிவின் முக்கிய உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (86)

### ஆசிரியர்களுக்கு மண்ணெண்ணெய்

(தென்மராட்சி)

பளை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால்1 லீற்றர்35/-படி மண்ணெண்ணெயபச்சிலைப் பள்ளி பகுதி பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு மாதம் 2 லீற்றர் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கு பளை உதவி அரசாங்க அதிபர் அவர்கள் சிபார்சு செய்து வருகின்றார் அவரின் சிபார்சோடு அப்பகுதியில் உள்ள தேவாலயத்தில் விசேட பூசைகள் இடம் பெறின் அதற்குக்குறைந்த விலையில் பொருள்களை வழங்கி வருகின்றனர் (86)

### கல்வி டிப்ளோமா விரிவுரைகள் ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவனப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியோருக்கான விரிவுரைகள் 22-8-93 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாக உள்ளதாக யாழ் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விரிவுரைகள் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ். வேம்படிமகளிர் கல்லூரியிலும் வாரம் ஒரு தினம் நடைபெற உள்ளதாக நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட படிவங்களுடன் செலுத்தப்பட்ட பணத்துக்கான பற்றுச்சீட்டுடனும் 06-08-93ற்கு முன்னர் யாழ் கல்வித்திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

### சிந்தனைக்கு

தொல்லையை வாங்கிக் கொள்வது உன் இயல்பாயின் அதை வாங்கிக்கொள். ஆனால் அதை அண்டையிலிருப்போருக்கு இரவல் கொடுக்காதே.

— ரட்யார்ட் கிப்ளிங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# தமிழர்களை விரட்ட புதிய தந்திரம்

கொழும்பில் வாழும் தமிழர்களின் அடிமைச் சாசனத்தையும் சிங்களப் பேரினவாதம் ஏற்க வில்லை. இனக்கலவரங்களால், சிங்களவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றதென்ற அனுபவம் தந்த பாடத்தின் பின் கைது, களவு போன்ற தொல்லைகள் மூலமும், குண்டுத் தாக்குதல்களின் மூலமும் தென்னிலங்கையில், குறிப்பாக கொழும்பில் இருந்தும் தமிழர்களை விரட்டிவிட முயற்சிக்கின்றது.

அண்மைக்காலத்தில், கொழும்பில், தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பல நூற்றுக் கணக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் கைது குறித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பிரமுகர்கள் அரசாங்கத்திடம் பலதடவை புகார் செய்துள்ளனர். ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உட்பட பாதுகாப்பு துணை அமைச்சர்கள் வரையில் இம் முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டன.

அரசாங்கம், அவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதி கூறியது. கைது செய்யப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றியும் பிரகடனப்படுத்தியது. ஆனால், நடைமுறையில், இவை எவையும் கடைப் பிடிக்கப்படவில்லை. கைதுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக, கைது செய்யப்பட்டவர்களின் அளவு, எங்கே வைக்கப்பட்டுள்ளார்கள் என்பன பற்றிய விபரங்களையும் வெளியிட மறுத்து வருகின்றது. அவை வெளியிட முடியாதவை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது தமிழர் தரப்பினருக்குக் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளில் அக்கறை எதையும் காட்டவில்லை. இது அரசின் ஒரு திட்டமிட்ட செயல் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் பூரண கட்டுப் பாட்டிலுள்ள பொலிசார் நடத்தும் கைதுகளை அரசாங்கம் விரும்பின் நிறுத்துவது கடினமான காரியமல்ல.

# கர்ப்பிணித் தாய்மார் இறப்பு இலங்கையில் அதிகம்

இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்கள் வருடமொன்றிற்கு சராசரி 150 முதல் 180 பேர் வரையில் பிரசவத்தின் போது இறப்பைத் தழுவுகின்றனர். இவ்வாறு இரத்தினபுரி மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் பேசிய சுகாதார அமைச்சின் செயலாளர் ஜோ. பெரேரா தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் தாய் சேய்சுகாதாரம் முக்கியமானதாகும். அதனால் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய சுகாதார சேவைகளை அதிகரிப்பதன் மூலமாகவே பிரசவத்தின் போது அல்லது அதற்கு அண்மித்த காலத்தில் இடம்பெறும் கார்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைக் குறைக்க முடியும் எனவும்தெரிவித்தார்.

# பிரச்சினைக்கு தீர்வின்றேல் பொருளாதாரம் வளராது

– ஹம்ரந்திர டி சில்வா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு முடிவு காணப்படாவிடில் இலங்கை நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது என்று இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவர் ஹரேந்திர டி சில்வா கூறியுள்ளார்.

வர்த்தக சங்கத்தின வருடாந்த கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், நிலையான பொருளாதார வளர்ச்சியை சாதிக்க வேண்டுமானால் போருக்கு இணக்கத் தீர்வைக் காண்பதற்கே அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். போருக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படாவிடில் 2000ஆம் ஆண்டளவில் புதிய கைத்தொழில்மயநாடு என்ற அந்தஸ்தை அடைவதற்கான எமது எதிர்பார்ப்பு எல்லாம் பகற்கனவாகவே போகும் எனவும் தெரிவித்தார்.

# கூட்டுறவுப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் கூட்டுறவு தராதர பத்திர கனிஷ்ட பிரிவு, சாதாரண பிரிவு, உயர் பிரிவுகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பதற்கான முடிவுத்திகதி இம்மாதம் 28ஆம் திகதி என பயிற்சிக்கல்லூரி அறிவித்தல்கள் தெரிவிக்கின்றன. இதில் கனிஷ்ட பிரிவுக்கு 8ஆம் வகுப்பு சித்தியும், சாதாரண பிரிவுக்கு க. பொ. த. சாதாரணத்தில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 4 பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல்வேண்டும் இதில் கூட்டுறவு ஊழியர்களிற்கு 6 பாடங்களில் சித்தி இருந்தால் போதுமானது. உயர் பிரிவுக்கு க. பொ. த உயர்தரத்தில் 4 பாடங்களும் சித்தியடைந்திருத்தல் அல்லது கூட்டுறவு தராதர பத்திர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்து 3 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (88)

பாடப் புத்தகங்களை

# போத்தல் கடைக்கு விற்ற பாடசாலை அதிபர்கள்

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட இலவச பாடப்புத்தகங்களை பழைய பேப்பர், போத்தல் கடைகளுக்கு அதிபர்கள் விற்றுள்ளனர். மத்திய மாகாணசபைக்கு உட்பட்ட நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களும், கம்பஹா மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர் ஒருவரும் இவ்வாறு பழைய பேப்பர், போத்தல்கடைகளுக்கு பாடப் புத்தகங்களை விற்பனை செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கம்பஹா மாவட்டப் பாடசாலை அதிபர் தனது பாடசாலையிலிருந்து 766 புத்தகங்களை விற்பனை செய்வதற்காக போத்தல் கடைக்குச் சென்ற வேளையில் பொலிசாரால்கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்துஇது சம்பந்தமான விபரம் தெரியவந்துள்ளது.

# ஊதிய உயர்வு வழங்கப்படுவதில் மாற்றாந்தாய் மனப்பான்மை

- பரந்தன் இரசாயன ஊழியர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பரந்தன்இரசாயன தொழிற்சாலை ஊழியர்களின் நலன்கள் தொடர்பாக தலைமைப் பீடம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து வருவதாக தொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்

பரந்தன் இரசாயனக் கம்பெனி லிமிட்டெட் ஊழியர்கள் சார்பாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமிக்கு அனுப்பப் பட்டிருக்கும் ஒரு மகஜரில் இக்குற்றச் சாட்டு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும், 1988 இல் வழங்கப்பட்ட சம்பள உயர்வு பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பில் உள்ள தலைமையக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இக்கொடுப்பனவு பரந்தனிலுள்ள தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

1993 ஜனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிதி அமைச்சரால் வரவு செலவுத்திட்டத்தின் போது அளிக்கப்பட்ட சம்பள உயர்வு தலைமையக ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் பரந்தனில் உள்ள தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### முதலிடம் பெற்றார்

மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் உடுப்பிட்டிபலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் திரு க. பாலன் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கான பரிசு கடந்த மாதம் 31ஆம் திகதி வழங்கப்பட்டது. (யோ)

### அறிவியலரங்கு

யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 07. 08. 1993 அன்று மாலை 6.30 மணிக்கு'வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம்' என்ற தலைப்பிலான அறிவியரங்கு நிகழவுள்ளது. மாதா மாதம் இந் நிலையத்தினரால் நடாத்தப்படும்மாதாந்த அறிவியலரங்கின் 15-வது தொடராக இந் நிகழ்வு இடம்பெறுகிறது.

### அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டம்

தேர்தல்ஆணையகம் அனைத்து இடைத்தேர்தல்கள் மற்றும் துணைத் தேர்தல்களை ஒத்திவைத்தமையால் எழுந்துள்ள நிலைமை தொடர்பாக ஆராய மக்களவைத் தலைவர் சிவராஜ் பட்டீல் அரசியல் கட்சித்தலைவர்களின் மாநாட்டைக் கூட்டினார். இக் கூட்டத்தில் பிரதமர் நரசிம்மராவ் உட்பட காங்கிரஸ் கட்சியின் முக்கிய அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களானஏ பி. வாஜ்பாய், வி.பி சிங், இந்திரஜித்குப்தா, ஜோர்ஜ் பெர்னான்டஸ், சோம் நாத் சட்டர்ஜி உட்பட பல்வேறு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# தட்டெழுத்தாளர் பரீட்சைக்கு திருமலை செல்ல தேவையில்லை

[யாழ்ப்பாணம்]

தட்டெழுத்தாளர்நேர்முகப் பரீட்சைக்காக திருக்கோணமலைக்குச் செல்லத் தேவையில்லை என்று மாகாணசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நேர்முகப் பரீட்சை எப்போது, எந்த இடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்படவில்லை.

போட்டிப் பரீட்சையில்சித்தியெய்தியவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி தட்டெழுத்தாளர் நேர்முகப் பரீட்சையில் ஈடுபட திருக்கோணமலை வரவேண்டும் என மாகாண சபையால் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

யாழ். குடாநாட்டில் 76 பேர் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி தட்டெழுத்தாளர் நேர்முகப் பரீட்சைக்காக காத்திருக்கின்றனர். (தி),(பா)

# கோமாளி அரசியலால் இளைஞர்கள் உயிரிழப்பு

- சமரவீர வீரவன்னி

(கொழும்பு)

கோமாளித்தனமான அரசியல் வாதிகளால் கல்வி கற்ற எமது இளைஞர்களில் பலர் உயிரிழந்துள்ளார்கள். பாடசாலைகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் பலபிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

ஊவா மாகாண, மாகாண சபை அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பிரதிச் செயலாளருமான சமரவீர வீரவன்னி ஹாலி-எலையில் கருத்தரங்கொன்றில் பேசும் போது இவ்வாறு கூறினார்.

நாட்டில்வேலைவாய்ப்பின்றி 2,00,000 யுவதிகளும், இளைஞர்களும் இருக்கின்றார்கள். இவர்களில் 50,000 பேர் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையிலும், 1,50,000 க.பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்கள். அரசு முதலில் இந்த இளைஞர் பக்கம் அதன் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# விடாப்பிடியான போக்கே பெரும்பிரச்சினையாகும்

– ஹரோல்ட் ஹேரத்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடாப்பிடித்தனமான போக்குத்தான் இனப் பிரச்சினை தீர்வு நோக்கிய அரசாங்கத்தின் முயற்சியில்பெரும் பிரச்சினையாகும் என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்தார்.

லண்டனுக்கு விஜயம் செய்துள்ள அவர் பிரிட்டன் அரசுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதனை வெளியிட்டார்.

# தேர்தல்களில் தலையிடாதிருக்க

# லிபியாவுக்கு எதிரான தடை மேற்குநாடுகள் துரிதமாக்கும்

அரசாங்கம், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதி கூறியது. கைது செய்யப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றியும் பிரகடனப்படுத்தியது. ஆனால், நடைமுறையில், இவை எவையும் கடைப்பிடிக்கப்படவில்லை. கைதுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக, கைது செய்யப்பட்டவர்களின் அளவு, எங்கே வைக்கப்பட்டுள்ளார்கள் என்பன பற்றிய விபரங்களையும் வெளியிட மறுத்து வருகின்றது. அவை வெளியிட முடியாதவை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது தமிழர் தரப்பினருக்குக் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளில் அக்கறை எதையும் காட்டவில்லை. இது அரசின் ஒரு திட்டமிட்ட செயல் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் பூரண கட்டுப் பாட்டிலுள்ள பொலிஸார் நடத்தும் கைதுகளை அரசாங்கம் விரும்பின் நிறுத்துவது கடினமான காரியமல்ல.

கைதுகளுக்கு அடுத்து, இன்று கொழும்பில் தமிழரை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளமை விதித்திருட்டுக்கள் ஆகும். வீதியில் செல்பவர் தமிழர் எனத் தெரிந்து விட்டால், தம்மை சி. ஐ. டி.கள் என அறிமுகப்படுத்தும் காடையர் கோஷ்டி தமிழரின் உரிமைகளை அபகரித்துச் செல்கின்றன. மருதானையிலும், பம்பலப்பிட்டியிலும், கோட்டைப் பகுதியிலும் இவ்வாறான கொள்ளைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

ஆனால், பொலிஸாரோ, ஏனைய அரசாங்க பிரமுகர்களோ இதனைக் கண்டு கொள்வதில்லை. தமிழரிடம் எதையும் பறிக்கலாம் என்பதுசட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது போல்தெரிகின்றது. ஏனெனில், தற்பொழுது கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டு, ரோந்து நடவடிக்கைகள் அதிகமாக்கப்பட்டுள்ள வேளையில், சனநெரிசல் மிக்க பகுதியில் நடக்கும் இப் 'பகற் கொள்ளையை' பொலிஸார் கண்டுகொள்ள முடியவில்லை, தடுக்கமுடியவில்லை என்றால், அதன் வெளிப்பாடு என்ன? பொலிசும், அரசும் இதனை அனுமதிக்கின்றன என்பதுதானே பொருள்.

இந்நிலையில், தற்பொழுது தமிழர்கள் கூடும் இடங்களில் குண்டுகளும் வெடிக்கத் தொடங்கியுள்ளன. ஆறு மணி இடைவெளியில் ஒரே பகுதியில் இரு குண்டுகள் வெடித்தென்பது, சிங்கள அரசு தமிழரின் பாதுகாப்பு குறித்து கொண்டுள்ள 'அக்கறை'யைக் காட்டுவதாகவே உள்ளது. அதாவது, முதல் குண்டு வெடித்த பின்னரும், பாதுகாப்பு என்பது வழங்கப்படவில்லை என்பதே, அடுத்த குண்டு வெடிப்பிற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

சுருக்கமாகக் கூறின், சிங்களப் பேரினவாதம் கொழும்பில் வாழும் தமிழர்களை விரட்டவும், அங்கு தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. கலவரத்தின் மூலம், விரட்டாமல், தொல்லை கொடுத்து விரட்டுவதே அரசாங்கத்தின் புதிய அணுகுமுறையாகும். இந்த வகையில், அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது ஒரு திட்டமிட்ட இன ஒடுக்கலின் ஒரு பகுதி என்றே கூறலாம்.

பாடப் புத்தகங்களை

## போத்தல் கடைக்கு விற்ற பாடசாலை அதிபர்கள்

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட இலவச பாடப்புத்தகங்களை பழைய பேப்பர், போத்தல் கடைகளுக்கு அதிபர்கள் விற்றுள்ளனர். மத்திய மாகாணசபைக்கு உட்பட்ட நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களும், கம்பஹா மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர் ஒருவரும் இவ்வாறு பழைய பேப்பர், போத்தல்கடைகளுக்கு பாடப் புத்தகங்களை விற்பனை செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கம்பஹா மாவட்டப் பாடசாலை அதிபர் தனது பாடசாலையிலிருந்து 766 புத்தகங்களை விற்பனை செய்வதற்காக போத்தல் கடைக்குச் சென்ற வேளையில் பொலிசாரால்கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்துஇது சம்பந்தமான விபரம் தெரியவந்துள்ளது.

கூட்டம்

தேர்தல்ஆணையகம் அனைத்து இடைத்தேர்தல்கள் மற்றும் துணைத் தேர்தல்களை ஒத்திவைத்தமையால் எழுந்துள்ள நிலைமை தொடர்பாக ஆராய மக்களவைத் தலைவர் சிவராஜ் பட்டீல் அரசியல் கட்சித்தலைவர்களின் மாநாட்டைக் கூட்டினார். இக் கூட்டத்தில் பிரதமர் நரசிம்மராவ் உட்பட காங்கிரஸ் கட்சியின் முக்கிய அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களானஏ பி. வாஜ்பாய், வி.பி சிங், இந்திரஜித்குப்தா,ஜோர்ஜ் பெர்னான்டஸ், சோம நாத் சட்டர்ஜி உட்பட பல்வேறு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

சபை அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பிரதிச் செயலாளருமான சமரவீர வீரவன்னி ஹாலி-எலையில் கருத்தரங்கொன்றில் ... கள். அரசு முதலில் இந்த இளைஞர் பக்கம் அதன் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## விடாப்பிடியான போக்கே பெரும்பிரச்சினையாகும்

**- ஹரோல்ட் ஹேரத்**

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடாப்பிடித்தனமான போக்குத்தான் இனப் பிரச்சினை தீர்வு நோக்கிய அரசாங்கத்தின் முயற்சியில்பெரும் பிரச்சினையாகும் என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்தார்.

லண்டனுக்கு விஜயம் செய்துள்ள அவர் பிரிட்டன் அரசுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதனை வெளியிட்டார்.

தேர்தல்களில் தலையிடாதிருக்க

# தேர்தல் ஆணையருக்கு பணிக்க தமிழ்நாடு அரசு வேண்டுகோள்

பழனி மக்களவைத் தொகுதிக்கும், இராணிப்பேட்டை சட்ட மன்றத் தொகுதிக்குமான இடைத்தேர்தல்களை நடத்துவதில் தலையிட வேண்டாமென தலைமை தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக் கோரி தமிழ்நாடு அரசாங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இதேவேளை மகாராஷ்டிரா மாநிலத்திலும் நடைபெறவிருந்த தேர்தல்களை இடைநிறுத்துமாறு தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிவிப்பை இடை நிறுத்தக் கோரி மகாராஷ்டிரா முதல்வர் சரத் பவார் பம்பாய் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் தேர்தல் நடத்தப் பணித்த போதும், வாக்குகளை எண்ணும் பணியை இடை நிறுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதேபோல மேற்கு வங்க சட்டமன்ற இடைத்தேர்தல்களையும், ராஜ்ய சபை இடைத்தேர்தல்களையும் ஒத்திவைக்கும்படி தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிவிப்புக்கு எதிராக மேற்கு வங்க அரசும் நீதிமன்றம் செல்லவுள்ளது.

இதனிடையே தலைமைத் தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கைகளில் எல்லா அம்சங்களையும் நன்கு அலசி ஆராய்ந்த பின்னர் தேர்தல்கள் ஒத்திவைப்பு பிரச்சினை தொடர்பான தனது கருத்தை காங்கிரஸ் கட்சி வெளியிடுமென கட்சியின் பேச்சாளர் சந்துலால் சந்திராகர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையக மறு சீரமைப்பு

## தெரிவிக்கப்பட்ட யோசனை அரசுபரிசீலனைக்குஎடுக்கும்

**- வி. சி. சுக்ளா**

(டில்லி)

பல உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணையகத்தை ஏற்படுத்துவது குறித்தும் தேர்தல் ஆணையாளரின் அதிகார வரம்புகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வி. சி. சுக்ளா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிட்டுப் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில் தேர்தல்நெறிமுறைகள் பாதிக்கப்படக் கூடாது என்று அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதாகவும், தேர்தல் ஆணையம் இடைத்தேர்தல்கள் மற்றும் துணைத்தேர்தல்களை ஒத்தி வைத்திருப்பதால்எழுந்துள்ளநிலைமையை சமாளிக்க தெரிவிக்கப்பட்ட அனைத்துயோசனைகளையும் அரசு பரிசீலிக்கும் என்றும் தெரிவித்தார்.

## தேர்தல் நிறுத்தி வைப்பு ஆணையர் அளித்தவிளக்கம்

(டில்லி)

தேர்தல் பணியில் அதிகாரிகளை ஈடுபடுத்துவது குறித்து தேர்தல் ஆணையகத்தின் சிறப்பு அதிகாரங்கள் பற்றி எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை தேர்தல் ஆணையகம் எந்தத் தேர்தல்களையும் நடத்தாது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் டி. என். ஷேசன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். புதுடில்லியில் நடந்த இச் செய்தியாளர் மாநாட்டில்இந்த விளக்கத்தை அவர் அளித்துள்ளார்.

### லாகூரில் குண்டு வெடிப்பு

பாகிஸ்தானின் லாகூர் நகரத்தில் நேற்று நடைபெற்ற வரிசையானபல குண்டுவெடிப்புக்களில் 25ற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் றேஞ்சர் படைத் தலைமையகம், ஹைகோர்ட் றெஜிஸ்தார் அலுவலகம், மற்றும் ரயில்வே நிலையம் என்பவற்றின் அருகே பகல் 11. 30க்கும் 12. 00 க்கும் இடையேயான முப்பதுநிமிடத்தினுள் இக் குண்டுவெடிப்புகள் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## லிபியாவுக்கு எதிரான தடை மேற்குநாருகள் துரிதமாக்கும்

(லண்டன்)

லிபியாவுக்கு எதிராக ஐ. நா விதித்தபொருளாதாரத்தடை தொடர்பாக அமெரிக்கா பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகள் நேற்று முன்தினம் மீண்டும் பரிசீலனை செய்துள்ளன.

இரண்டு விமானக் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டவர்களை ஒப்படைப்பது தொடர்பாக லிபியாவுக்கு எதிராக ஐ. நா பொருளாதாரத் தடை விதித்து இருப்பது தெரிந்ததே

அடுத்த வாரத்தில் ஐ நா பாதுகாப்புசபை இந்த தடைகளின் அமுலாக்கம் தொடர்பாக பரிசீலனை செய்ய இருக்கும் நிலையில் அமெரிக்கா, பிரிட்டன்,பிரான்சு ஆகியவை ஆலோசனைகளை நடத்தியிருப்பதுகுறிப்பிடத்தக்கதாகும்.

லிபியாவிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்வது அந்தநாட்டுடன்விமானப்போக்குவரத்து செய்வது என்பவற்றிற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதும் குறைந்தளவிலான இராஜதந்திர உறவுகள்பேணுவதுபோன்றபல செயல்கள் லிபியாவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருப்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

## சட்டவிரோத குடியேற்றம் தடுக்க அமெரிக்கா திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்கவும் எல்லை ரோந்துகளை அதிகரிக்கவுமான திட்டம் ஒன்றுக்கு 17 கோடியே 25 இலட்சம் டாலர் நிதியை ஜனாதிபதி கிளிங்டன் காங்கிரசிடம் கோரியுள்ளார்.

எல்லைகளைமூடுவதன்மூலம் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க முடியாது சட்டவிரோதிகளை நாட்டுக்குள் கொண்டு வருபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவும்.எல்லை ரோந்தை அதிகரிக்கவும் விசா விண்ணப்பங்களை அபிவிருத்தி செய்யவும் அரசியல் புகலிடம்கோருவோரின் நிலையைத் துரிதமாகப் பரிசீலனை செய்யவும் இத்திட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் 2இலட்சம் முதல் 3இலட்சம் சட்ட விரோத குடியேற்ற வாசிகள் அமெரிக்காவினுள் செல்கிறார்கள்.

சமீபத்தில் கப்பல்மூலம் சென்ற 658 சீனர்களை ஏற்றுக்கொள்ள அமெரிக்கா மறுத்துவிட்டது.

## வடகொரியா ஏவுகணை பரீட்சிப்பு

620 மைல் தூரம் செல்லக் கூடிய ஏவாயுதம் ஒன்றை வடகொரியா பரீட்சித்திருப்பதான செய்தியை அமெரிக்க சி. ஐ. ஏ. தலைவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

வடகொரியா 620 மைல் தூரம் செல்லக்கூடிய 4 ஏவுகணைகளைப் பரீட்சித்திருப்பதாக தென்கொரியா முன்பே அறிவித்திருந்தது.

இந்த ஏவுகணைகள் அணுசக்தி, இரசாயன நச்சுக்கிருமி குண்டுகளைத் தாங்கிச் செல்லும் நிலையைக் கொண்டவை என சி ஐ ஏ. தலைவர் மேலும் கூறியுள்ளார்.

## 3 - ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் யசோதரன்

(மணியம் கிருஷ்ணதாஸ்)
(பம்பைமடு, வவுனியா)
திருமலை

மலர்வு:- 1964—10—16

வீரச்சாவு:- 1990—08—05

தமிழீழம் என்ற நாடு
தலை நிமிர்ந்தே வாழ்ந்திட
தமிழ் மக்கள் சுதந்திரத்தை
நிரந்தரமாய் பெற்றிட
உறுதியுடன் உழைத்து
எதிரி குண்டை பல தடவை ஏந்தினாய்

கோட்டையிலே உங்கள்
உடல் வீழ்ந்து விட்ட போதிலும்
உன் பணியை தொடர்வதற்கோ
உன் உடன் பிறப்புக்களும்
நண்பர்களும் உள்ளனர்

காய் கனியாய் மாறி வருதல் போலே
நாளை உந்தன் கனவு நனவாகும்
நாடு இங்கு வாழும் மட்டும் நண்பா,
உன் பெயரும் நிலைத்திருக்கும் இங்கு.

குடும்பத்தினர்
நண்பர்கள்.

(சி/7139)

## மரண அறிவித்தல்

## தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சை முடிவுகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

1992 ஆம் ஆண்டிற்குரிய 9ஆம் ஆண்டுக்கான கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ்ப் பரீட்சையின் பெறுபேறுகள் யாழ். கல்வித் திணைக்களம் வந்துசேர்ந்துள்ளன.

இப் பெறுபேறுகள் நேற்றே சகல கோட்டக் கல்வி அலுவலகங்களிற்கும் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இவற்றை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்களது கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கும்படி யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

## நான்குபேர் மட்டும் வாதுவவில் பயணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கொழும்பு புறப்படவுள்ள வாதுவ கப்பலில் நான்கு பேர் பயணம் செய்யவுள்ளனர்.

இக் கப்பலில் பத்துப் பேர் செல்லலாம் என யாழ் அரசாங்க அதிபர் பதிவு செய்திருந்த போதிலும் நான்கு பேரை மட்டுமே ஏற்றிச்செல்ல இடமிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

வாதுவ கப்பல் இன்னும் சில தினங்களில் கொழும்பிற்கு புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(தி),(பா)

## 'நல்லைக் குமரன் மலர்' வெளியீடு 07-08-1993

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் எதிர்வரும் 07-08-93 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு 'நல்லைக் குமரன் மலர்' வெளியீடு செய்யப் படவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியில் பங்குபற்றி முதல் நாள் மலரினைப் பெற்று எமக்கு ஆதரவுநல்க விரும்புவோர் எதிர்வரும் 07-08-93 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு முன்னதாக கீழ்க்காணும் மாநகர அலுவலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

1 மாநகராட்சி மன்றத்தின் பிரதான அலுவலகம்
2. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியில் உள்ள சுகாதார அலுவலகம்
3. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கண்டி வீதி, சுண்டிக்குளி

சைவசமய விவகாரக் குழு
மாநகர அலுவலகம், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
04-08-1993 (சி-7137)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



## வாள்வெட்டு

வாள்வெட்டுக்கு ஆளாகிய குடும்பஸ்தர் ஆபத்தான நிலையில் மந்திகையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு அல்வாய் வடக்கு குஞ்சர்ஓடை என்னும் இடத்தில் நடந்தது.

உடல் முழுவதும் பலத்த வெட்டுக்காயங்களுக்கானான கனகசூரியம் விஜயரத்தினம் (வயது 38) என்னும் குடும்பஸ்தரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவராவார்.

இது சம்பந்தமாக தவராசா சந்திரகுமார் (வயது 22) என்னும் இளைஞரைத்தேடி பருத்தித்துறை காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனரென தெரிய வருகின்றது. (30)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 04-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10540

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-2321, 41-9579, 42-6511, 41-9165, 28-1862, 24-4457, 28-9259, 27-9604, 24.4664, 41-4129, 27-2034, 27-9327, 28-2464, 24-7087, 24-1856.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-6646, 27-4920, 28-0912, 26 9201, 24-0521, 26-7039, 24-9938.

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ. சி. வரதராஜக்குருக்கள்

(பிரதமகுரு,விசவத்தனை முருகன் கோவில்,பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

சிவஸ்ரீ. சி.வரதராஜக்குருக்கள் இறைபதம்சேர்ந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற திருமதி ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஸ்ரீ. இராதாகிருஷ்ணக் குருக்கள் மற்றும் ஸ்ரீகாந்தன் [மானிப்பாய் இந்துக் கல்லூரி], விஜயரங்கன் [டென்மார்க்], சிவகுமாரன் [நிதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்], ஞானேஸ்வரன், [யாழ். போதனா வைத்தியசாலை], ஞானசேகரன், ஜெகதானந்தன் [விவசாய காப்புறுதிச்சபை, வவுனியா], இராஜேஸ்வரக்குருக்கள், பிருந்தா, சாருமதி ஆகியோரின் அன்பான தந்தையும், சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக்குருக்கள் [வேரற்கேணி கந்தசுவாமி கோவில், மட்டுவில்] அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார். இன்று பிற்பகல் இறுதிக் கிரிகைகள் பண்ணாகம், விசவத்தனையில் நடைபெறும்.

தகவல்:
பிள்ளைகள்

பண்ணாகம், சுழிபுரம்.
(5623)



## நல்லூர் உற்சவகால சித்த மருத்துவ கண்காட்சி

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சித்த மருத்துவப் பகுதியினரின் மூலிகைகள் மருந்து வகைகள் அடங்கிய கண்காட்சி ஒன்று நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாக இடம் பெறவுள்ளது.

மூலிகைக் கன்றுகளை வைத்திருப்போர் இக்கண்காட்சியில் வைக்க விரும்பினால் யாழ். மாநகரசபையின் சித்த மருத்துவப் பகுதியினருடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## நல்லூர் மேற்கு வீதியில் மத்திய வைத்தியசாலை

(கொழும்புத்துறை)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ். இரத்தினசபாபதியினால் நல்லூர் மேற்கு வீதியில் மத்திய அரசினர் வைத்தியசாலை ஒன்று திறக்கப்பட்டு நோயாளர்களுக்கு வைத்திய சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

இவ் வைத்தியசாலை காலை ஏழு மணி முதல் மாலை ஏழு மணி வரை திறந்திருந்து நோயாளருக்கு வைத்திய சிகிச்சை செய்ய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதற்கென மேலதிக வைத்தியதிகாரியாக திரு ஆ. திருநாவுக்கரசு நியமிக்கப்பட்டுள்ளார், (24)

## பத்திரிகையியல் கற்கைநெறி

யாழ். பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகு பத்திரிகையியல் அடிப்படைக் கற்கை நெறியை நடத்தவுள்ளது.

இக் கற்கை நெறி தொடர்பாக பத்திரிகைத்துறை சார்ந்த வளத்தினர் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டமொன்று பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் பிரிவில் வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## கருத்தரங்கு

பாடசாலைகளில் இன்றைய உயர்கல்வி நிலைமை பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் எட்டாம்திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல்9 00மணிக்கு யா/யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதால் யாழ். மாவட்டத்தில் உள்ள க. பொ. த. (சா/த), (உ/த) வகுப்புகளைக் கொண்ட பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர்கள் அன்றைய தினம் தவறாது கலந்து கொண்டு கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க உதவுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## குடும்ப அட்டை மீளாய்வு

தலை நிமிர்ந்தே வாழ்ந்திட
தமிழ் மக்கள் சுதந்திரத்தை
நிரந்தரமாய் பெற்றிட
உறுதியுடன் உழைத்து
எதிரி குண்டை பல தடவை ஏந்தினாய்

கோட்டையிலே உங்கள்
உடல் வீழ்ந்து விட்ட போதிலும்
உன் பணியை தொடர்வதற்கோ
உன் உடன் பிறப்புக்களும்
நண்பர்களும் உள்ளனர்

காய் கனியாய் மாறி வருதல் போலே
நாளை உந்தன் கனவு நனவாகும்
நாடு இங்கு வாழும் மட்டும் நண்பா,
உன் பெயரும் நிலைத்திருக்கும் இங்கு.

குடும்பத்தினர்
நண்பர்கள்.

(சி/7139)

---

# மரண அறிவித்தல்

''விராட் விஸ்வப் பிரம்மனே நம''



மண்ணக வரவு 14 - 06 - 74 | விண்ணக விரைவு 03 - 08 - 93

## நவநீதகிருஷ்ணன் தேவதாசன் [தேவன்]

(இடைக்காடு மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன்)

அச்சுவேலியை சேர்ந்த த. நவநீதகிருஷ்ணன் தேவதாசன் (தேவன்) 03 - 08 - 93 அன்று காலமானார். இவர் திரு. நவநீதகிருஷ்ணன் (கொக்குவில் மேற்கு), திருமதி ரூபவதி தம்பதிகளின் புதல்வனும், சசிரேகா, திருமதி சுமதி நகுலேஸ்வரன் (ஜேர்மனி), மோகன், முரளீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், த. யோகேஸ்வரன் (கொழும்பு), திருமதி புஸ்பவதி மார்க்கண்டு (சங்கானை), சி. நடேசலிங்கம் (காந்தி), பத்மாவதி தம்பதிகளின் பெறாமகனும், இ. சிலோன் மணி (கொழும்பு), சி. றதிதேவி (தம்பனை) ஆகியோரின் மருமகனும், வனஜா, சைலஜா, உஷா, செல்வி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், தயாபரன், சுதாகரன், கண்ணா, பிறேமலதா, சந்திரலதா, ஆகியோரின் மைத்துனரும், மயூரி (ஜேர்மனி) யின் மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 05 - 08 - 93 வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெற்று அச்சுவேலி குடும்ப மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. நவநீதகிருஷ்ணன்
(தகப்பன்)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

[5621]

---

கண்டி வீதி, சுண்டிக்குளி


சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-08-1993

(சி-7137)

---

# 3-ம் ஆண்டு நினைவலைகள்



## லெப். புரட்சிமாறன்

(இராசநாயகம தேவசகாயம்)

மலாவு: 12 09-1957 | வீரச்சாவு: 05-08-1990

தமிழ் மண் காக்க
விரைந்த எம் மறவனே.

புரட்சிகள் பல புரிந்து
கோட்டையில் மாவீரனானாய்

காவியமாகி சரித்திரம் படைத்த உன்
கனவுகள் நனவாக இறைவனை இறைஞ்சுகிறோம்

மாவீரனாகி மூன்றாண்டுகளானாலும்
அழியாது உன் நினைவு எம் மனத்தில்.

05-08-1990-ல் கோட்டை தாக்குதலில் இவருடன் வீரச்சாவடைந்த சக போராளிகளையும் இந் நாளில் நினைவு கூருகிறோம்.

இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் சக போராளிகளையும், நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(சி/7135)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 05-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஸ்ரீ. இராதாகிருஷ்ணக் குருக்கள் மற்றும் ஸ்ரீகாந்தன் [மானிப்பாய் இந்துக் கல்லூரி], விஜயரங்கன் [டென்மார்க்], சிவகுமாரன் [நிதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்], ஞானேஸ்வரன், [யாழ். போதனா வைத்தியசாலை], ஞானசேகரன், ஜெகதானந்தன் [விவசாய காப்புறுதிச்சபை, வவுனியா], இராஜேஸ்வரக்குருக்கள், பிருந்தா, சாருமதி ஆகியோரின் அன்பான தந்தையும், சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக்குருக்கள் [வேரற்கேணி கந்தசுவாமி கோவில், மட்டுவில்] அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார். இன்று பிற்பகல் இறுதிக் கிரியைகள் பண்ணாகம், வசவத்தனையில் நடைபெறும்.

தகவல்:
பிள்ளைகள்

பண்ணாகம், சுழிபுரம்.
(5623)

---



## திரு. செ. சபாபதிப்பிள்ளை

தோற்றம்: 07-05-1920 | மறைவு: 04-08-1993

அச்சுவேலிவடக்கைபிறப்பிடமாககொண்ட பிரபலவர்த்தகரும் சபாறேட் சென்றர் உரிமையாளருமான 'திரு.செ. சபாபதிப்பிள்ளை 04-08-1993 நேற்று தனது இல்லத்தில் காலமானார். அன்னார் திருமதி ச கண்ணகையின் அன்புக் கணவரும், சபா இராசகுலசிங்கம் [றதனி மோட்டோர்ஸ் அச்சுவேலி], சபா. இரத்தினசிங்கம் [சபாறேட் சென்றர் இருபாலை], சபா.யோகசிங்கம் [சபாறேட் சென்றர் அச்சுவேலி], சபா.ஜெயகுலசிங்கம் [மாணவன், மின்பொறியியலாளர், தொ. நு.கல்லூரி கொக்குவில்], திருமதி மூ.தேவமலர், திருமதி து. றஞ்சிதமலர், திருமதி ச. சந்திரமலர் [கனடா] ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு வே.முத்துலிங்கம் [தேவி அரிசி ஆலை அச்சுவேலி], திரு செ. துரைச்சாமி [M.L.T. ஓமான்], திரு.பொ. சதாசிவம் [கனடா], திருமதி இ. மனோராணி, திருமதி இ நிறைஞ்சலா, திருமதி யோ.வவானிதேவி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 04-08-93 [நேற்று] பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெற்று அச்சுவேலி வடக்கு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், வாடிக்கையாள நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சபா. இரத்தினசிங்கம்
(மகன்)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(5619)

---

பெறவுள்ளது.

## கருத்தரங்கு

பாடசாலைகளில் இன்றைய உயர்கல்வி நிலைமை பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் எட்டாம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல்9 00மணிக்கு யா/யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதால் யாழ். மாவட்டத்தில் உள்ள க. பொ. த. (சா/த), (உ/த) வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர்கள் அன்றைய தினம் தவறாது கலந்துகொண்டு கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க உதவுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## குடும்ப அட்டை மீளாய்வு

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் குடும்ப அட்டைகள், உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாதம்10ஆம்திகதிக்குள் மேற்படிஅட்டைகள் யாவும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

(யோ)

## பயிற்சிக் கருத்தரங்கு

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் கரவெட்டி பிராந்திய சபை நடாத்தவுள்ள கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக் கருத்தரங்குகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன் நெல்லியடியில் உள்ள சங்கங்களின் சமாச பிராந்தியசபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். (யோ)

---

லைசோல்
இடம்பெறவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க லைசோல் யாழ். போதனா மருத்துவமனையில் மூன்று மாதங்களுக்கு முன்பே தீர்ந்து போய்விட்ட நிலையில் போதனா மருத்துவ மனையில் ஒழுங்கான முறையில்தொற்று நீக்கம் செய்முடியாத நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

---

இளைஞரின்
அறுவைச் சிகிச்சை செய்து பிளேட்டை எடுக்க முயன்ற போது செல்வநாதன் உயிரிழந்தார்.

இச் சம்பவம் குறித்து மருத்துவமனை இயக்குனர் பெர்னான்டோ கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.